பதிவுஎண் 2041

தனிப்பிரதி விலை அணு ஒன்று



சந்தா விபரம்.	
	ரூ. அ.
வருட சந்தா.	3—0
6 மாத சந்தா.	1-12
வெளிநாடுகளுக்கு வருட சந்தா	4—0

ஆதி திராவிட சங்கங்களுக்கு பாதி சந்தாவுக்கு அனுப்பப்படும்.

முன் பணமின்றி பத்திரிகை அனுப்பப்படமாட்டாது.

[வாரப்பதிப்பு.]

ஆசிரியர்

ஈ. வெ. இராமசாமி நாயக்கர்.

ஈரோட்டினின்று ஞாயிறு தோறும் வெளி வருவது.

விளம்பர விகிதம்.	
	ரூ. அ.
கலம் ஒன்றுக்கு வாரம் ஒன்றுக்கு	5—0
சில்லரை விளம்பரம் அங்குலம் 1க்கு	0—8

நீடித்த கால விளம்பரம் செய்வோருக்கும், பெரிய விளம்பரம் செய்வோருக்கும், பிரத்தியேக விகிதம்.

முன் பணமின்றி விளம்பரம் பிரசுரிக்கப்படமாட்டாது.

பிறப் பொக்கு மெல்லாவுயிர்க்குஞ் சிறப்பொவ்வா
செய் தொழில் வேற்றுமையான்—குறள்.

ஒழுக்க முடைமை குடிமை யிழுக்க
மிழிந்த பிறப்பாய் விடும்—குறள்.

மாலை க | குரோதன-ளு கார்த்திகை-மீ எ-உ (22—11—25) ஞாயிற்றுக்கிழமை | மலர் உகூ



மகாத்மா காந்திக்கு ஜே!

வந்தேமாதரம்! அல்லாஹு அக்பர்!!

திருப்பூர் சுத்த கத்தர் ஜவுளிகள்.

தமிழ்நாடு கதர் போர்டாரால் அத்தாட்சிப்பத்திரம் பெற்ற எங்கள் டிப்போவில் பல ரகம் வேஷ்டிகள், துண்டுகள், வெள்ளைப் பீசுகள், ஷர்டிங், கோட்டிங், சீட்டி தினுசுகள், தாவணிகள், சுங்கடிச்சேலைகள், சால்வைகள், அச்சு வேஷ்டிகள் கிடைக்கும். தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள். பிரதி ஆர்டருடன் 100க்கு 25 ரூ. வீதம் அட்வான்சு அனுப்பவேண்டும். வி. பி. அனுப்ப முடியாத வெளி நாட்டு ஆர்டர்களுக்கு பூராத்தொகையும் முன் பணமாக அனுப்ப வேண்டும்.

ஆர். டி. முத்துசாமி செட்டியார்,
கத்தர் டிப்போ, திருப்பூர், (தென் இந்தியா.)

காங்கிரஸ் அத்தாட்சி பெற்ற சுத்த கதர்!

தமிழ் நாடு காங்கிரஸ் கதர் போர்டின் விலைக்கே விற்கப்படும். எல்லா ரகங்களும் கிடைக்கும். விலை ஜாபிதாவுக்கும் மற்ற விபரங்களுக்கும் கீழ்கண்ட விலாசத்துக்கு எழுதவும். சாம்பிள் (மாதிரி)க்கு 4 அணு ஸ்டாம்பு அனுப்பவும்.

கற்பக விநாயகர் கதர் நிலயம்,
மண்டி வீதி, ஈரோடு. (S. I. R.)

திருப்பூர் சுத்த கத்தர் ஜவுளிகள்.

பலரகம் வேஷ்டிகள், துண்டுகள், வெள்ளை பீஸ் ரகங்கள், ஷர்ட்டிங், கோட்டிங், சீட்டி தினுசுகள், தாவணிகள், சுங்கடி சேலைகள் இன்னும் அநேக தினுசுகள் எங்களிடத்தில் கிடைக்கும். தேவைக்கு உடனே ஆர்டர் செய்யுங்கள், ஆர்டர்கள் 100-க்கு 25 ரூபாய் வீதம் அட்வான்ஸ் அனுப்பவேண்டும். வி. பி. அனுப்பமுடியாத வெளிநாடுகளுக்கு பூராத்தொகையையும் முன் பணமாகவே அனுப்பவேண்டும்.

(அத்தாட்சி பத்திரம்) தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டி.

ஸ்ரீமான் என். கே. சங்கரப்ப செட்டியார் கைநூல் கைத்தரியால் தயார் செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்திசெய்து நியாயமான விலைக்குவிற்று வருகிறார்.

(ஒப்பம்) வா. மு. தங்கப்பெருமாள்
காரியதரிசி, கத்தர் இலாகா.

விலாசம்:—
என். கே. சங்கரப்ப செட்டியார், கத்தர் ஸ்டோர்,
திருப்பூர், (தென் இந்தியா.

திருப்பூர் சுத்த கத்தர் ஜவுளிகள்

பல ரகம்வேஸ்டிகள், துண்டுகள், வெள்ளை பீஸ் ரகங்கள், ஷர்ட்டிங், கோட்டிங், சீட்டி தினுசுகள், தாவணிகள், சுங்கடி சேலைகள் இன்னும் அநேக தினுசுகள் எங்களிடத்தில் கிடைக்கும். தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள். வி. பி. அனுப்பமுடியாத வெளிநாடுகளுக்கு பூராத்தொகையையும் முன்பணமாக அனுப்பவேண்டும்.

(அத்தாட்சி பத்திரம்.)

ஸ்ரீமான் ஆர். எம் எஸ். சிதம்பரம் செட்டியார் முத்துசாமி செட்டியார் கைநூலால் கைத்தரியால் தயார் செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்தி செய்து நியாயமான விலைக்குவிற்றுவருகிறார்.

(ஒப்பம்) வா. மு. தங்கப்பெருமாள் காரியதரிசி கத்தர் இலாகா

விலாசம்:—
ஆர். எம். எஸ். சிதம்பரம் செட்டியார், முத்துசாமி செட்டியார்,
கத்தர் டிப்போ, திருப்பூர், (தென் இந்தியா)

தீண்டாமைக்கு யார் பொறுப்பாளி? பாலக்காட்டில் 144-க்கு யார் பொறுப்பாளி?

தீண்டாமை யென்பது நமது நாட்டில் இந்து மதத்தில் மாத்திரம் மனிதனுக்கு மனிதன் பிறவியிலேயே உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்றும். மனிதனுக்கு மனிதன் பார்த்தால் கிட்டவந்தால். பேசினால், தெருவில் நடந்தால், தொட்டால், கோவிலுக்குள் நுழைந்தால், சாமியைப்பார்த்தால், மத தத்துவ மென்னும் வேதத்தைப்படித்தால் பாவம் என்னும் முறைகளில் அனுஷ்டிக்கப் பட்டுவருகிறது. இதன் பலனாய் 33 கோடி ஜனசமூகத்தில் 60 70 லக்ஷம் ஜனங்கள் உயர்ந்தவர்களென்றும், பிராமணர்கள் என்றும் தங்களை சொல்லிக்கொண்டு மற்றவர்களை சூத்திரர்களென்றும் பஞ்சமர்களென்றும் மிலேச்சர்களென்றும் அழைப்பதோடு மிருகங்களுக்கும் பட்சிகளுக்கும் பூச்சிபுழுக்களுக்கும் உள்ள சுதந்தரங்கூட கொடுப்பதற்கில்லாமல் கொடுமைப்படுத்தி வைத்திருப்பதை நாம் பார்த்து வருகிறோம். ஒற்றுமையினாலும் அரசாங்கத்தாருக்கு நல்ல பிள்ளைகளாய் நடந்து கொள்ளுவதினாலும் கிருஸ்துவர்களும் மகமதியர்களும் பிராமணர்களாலும் அவர்களது தர்மமான சாஸ்திரங்களாலும் மிலேச்சர்களென்று அழைக்கப்பட்டாலும் தெருவில் நடத்தல் முதலிய சில உரிமைகளை பெற்றிருக்கிறார்கள். இதைப்பொருத்தவரையிலும் கிருஸ்தவர்களும் மகம்மதியர்களும் நமது அரசாங்கத்தாருக்கு நன்றி செலுத்த கடமைப்பட்டவர்களென்பதை நாம் மறுக்கமாட்டோம். அரசாங்கத்தாருக்கு நல்லபிள்ளைகளாய் நடக்காததாலும் அரசாங்கமதமாகிய கிருஸ்தவமதத்தைத் தழுவாத "பாவத்தினாலும்" 60, 70 லக்ஷம் பிராமணர்களால் 7 கோடி இந்திய சகோதரர்கள் பஞ்சமர்களென்றும் சண்டாளர்களென்றும் கருதி தீண்டல், தெருவில் நடத்தல் முதலிய மேற்கண்ட உரிமைகள் அற்றுஉழலுவதைபார்க்கிறோம். இதல்லாமல் சுமார் 16 கோடி இந்தியர் ஷை 60, 70 லக்ஷம்பிராமணர்களால் (யுத்தத்தில் ஜெயித்து அடிமையாக்கப்பட்டவன்)தன் தேவடியாள் மகன் குலவழியாக பிராமணருக்கு தொண்டு செய்பவன் அடிமைவேலைக்கு விலைக்குவாங்கினவன் என்னும் பொருள் அடங்கிய (மனு 8ம் அத் 415 வதுலோகம்) சூத்திரர் என்று கருதப்படுகிறார்கள்.(பிராமணன் சம்பளம் கொடுத்தேனும்,கொடாமலேனும் சூத்திரனிடத்தில் வேலை வாங்கலாம்,ஏனெனில் சூத்திரன் பிராமணர்களுக்கு வேலை செய்வதற்காகவே கடவுளால் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறான். மனுசாஸ்திரம் 8வது அத் 413 வது சுலோகம்.)

அதோடு மாத்திரமில்லாமல் இவ்வுயர்வு தாழ்வு என்னும் தொத்து வியாதி பிராமணர்களிடம் இருந்து உண்டாயிருந்தாலும் அவர் ஒழிந்த மற்ற வகுப்புகளுக்குள்ளும் அது பரவி அனேகமாய் ஒவ்வொரு வகுப்பும் மற்ற வகுப்பை தாழ்ந்தவர்கள் என்றும் தீண்டக்கூடாதவர்கள் என்றும் கருதிக்கொண்டு வருவதையும் பார்க்கிறோம். உயர்ந்த தத்துவங்களைக் கொண்டதும் புல்பூண்டு,பூச்சி,புழு, மரம், கல், பக்ஷி,மிருகம் யாவும் கடவுள் மயமென்றும் ஒவ்வொன்றும் பூசிக்கத் தக்கதென்னும். கொள்கைகளைக் கொண்டதுமான இந்து மதம் என்றுசொல்லப்படுவது சிலரின் நன்மைக்காக அவர்களின் தந்திரத்தினாலும் மோசத்தினாலும் பாழாக்கப்பட்டு ஒருபெரியசமூகமே சின்னபின்னப்பட்டு அன்னியர் வசமாகி ஒற்றுமை யிழந்து துவேஷமேற்கொண்டு மீளா நரகம் என்னும் அடிமைக் குழியில் ஆழ்ந்து கொண்டுபோகிறது. மிகவும் கொடுமையான இவ்வித பிராமண தர்மம் இந்தியாவுக்குள் நுழையாதிருந்திருக்குமானால் இன்றைய தினம் இந்தியா இக்கெதியில் இருந்திருக்கவேமாட்டாது. அப்படி இருந்தும் இப்பிராமண தர்மத்தால் தாங்கள் உயர்ந்த ஜாதியார் என்கிறகாரணத்தால் உயர்வாய் அதாவது மற்றவர்களைப் போல் கஷ்டப்படாமல் வாழ சந்தர்ப்பம் கிடைத்துவிட்டதாலும் அன்னிய அரசாங்கத்திற்கு அனுகூலிகளாகவும் ஒற்றர்களாகவும் இருக்கிற காரணத்தால் அதில்தங்களுக்குசெல்வாக்கு ஏற்பட்டுப் போய்விட்டதாலும் தீண்டாமை என்னும் கொடுமையால் தேசத்தின் நிலையையும்அதில் உள்ளமக்கள் படும் துன்பத்தையும் கொஞ்சமும் கவனியாமல் மேலும் மேலும் அதை நிலைநிறுத்தவே பாடுபடுகிறார்கள். இவ்வித பிராமண தர்மம் என்பது நமது நாட்டை விட்டு ஒழிந்தாலல்லாமல் அல்லது அவர்கள் மறறவர்களிலும் பிறவியிலேயே உயர்ந்தவர்கள் என்னும் கொள்கையாவது நம்நாட்டை விட்டு ஒழிந்தாலல்லாமல் (என்றைக்காவது ஒரு நாளைக்கு இந்தியாவில் பிராமண கொள்கை இல்லாமல் போகத்தான் போகிறது. ஆனால் அதற்குள் இந்து மதமே போய் இந்தியா முழுதும் மகமதியர்களும் கிருஸ்தவர்களும் இந்துக்கள் அல்லாதவர்களுமே ஆய்விடப்போகிறார்கள். அப்பொழுது இக்கொள்கை போனாலென்ன இருந்தாலென்ன?) இந்தியர்கள் விடுதலையடைவதோ சுயராஜ்யம் பெறுவதோ, அன்னிய அரசாங்கத்தின் கொடுமைகளிலிருந்து மீள்வதோ சூரியன் மேற்கிலுதிப்பது போலத்தான்! ஏனெனில் இவ்வித பிராமண தர்மம் நாடெங்கும் பரவுவதால் தாய்க்கு பிள்ளை தொட்டால் பாவமாய் விடுகிறது! இப்பிராமணர்களைப் பார்த்தே மக்கள் எல்லோரும் பிராமணர்களாக பார்க்கிறார்கள். பிராமணர்கள் என்றால் மற்றவனைத்தாழ்ந்தவன் என்றும் தொடக்கூடாதவன் முதலியவன் என்று என்னுவதுதான் என நினைக்கிறார்கள். உதாரணமாக ஒரு தண்ணீர் குழாயில் தண்ணீர் பிடிக்கவரும் ஒரு பிராமண ஸ்திரீ குடத்தில் கொஞ்சம் தண்ணீரும் கையில் கொஞ்சம் புளியும் கொண்டு வருவதோடு முகத்தையும் கோணிக்கொண்டு வருகிறாள். குழாயண்டை வரும் போதே நிலத்திலெல்லாம் தண்ணீர் தெளித்துக் கொண்டு குழாயின்மேலும் தண்ணீரைக்கொட்டி புளியால் குழாயை தேய்த்து கழுவி பிறகு தண்ணீர் பிடிக்கிறாள் இதை பார்த்துக்கொண்டிருக்கும் ஒருபிராமணரல்லாத இந்துஸ்திரீதானும் அரைக்குடம் தண்ணீரும் கையில் ஒரு புளி உருண்டையும் கொண்டு முகத்தை இழுத்துக்கொண்டு ஷை பிராமணிஸ்திரீ செய்தது போலவே செய்துவிட்டுதண்ணீர் பிடித்து கொண்டு போகிறாள். இதைப்பார்த்துக்கொண்டிருக்கும் பக்கத்து வீட்டு மகமதிய ஸ்திரீயும் கிருஸ்தவ ஸ்திரீயும் அதுபோலவே வரும்பொழுதே முக்கால் குடம் தண்ணீரையும் முன்னையதிலும் பெரிய புளி உருண்டையையும் கொண்டு முகம் கோணிக்கொண்டு வருவதோடல்லாமல் வாயில் முணு முணுத்துக்கொண்டே வந்து தெருவெல்லாம் தண்ணீர் தெளித்து குழாயையும் தேயத்தேய கழுவித் தண்ணீர்பிடித்து போகிறாள். பஞ்சமஸ்திரீ அந்த வீதியில் இல்லாததால் அவர்கள் இதைப்பழக சந்தர்ப்பம் கிடைப்பதில்லை. இப்படி ஒருவரைப்பார்த்து ஒருவர் பழகியே தீண்டாமையென்னும் தொத்துநோய் தேசம் முழுவதும் பரவி வருகிறது. தீண்டாமை ஒழிய வேண்டும் என்று மகாத்மா காந்தியும் மற்றும் பல ஜீவகாருண்ணியமுள்ளவர்களும் ஒரு பக்கம்பிரயத்தனப்பட்டுக் கொண்டிருக்கும் போது பாலக்காடு முனிசிபல் பொது வீதியில் ஈழுவ சகோதரர்கள் நடக்கக்கூடாது என்று 144 உத்திரவுபோட்டதும்,(ஈழுவர்கள் என்பது சென்னை ஹைகோர்ட் ஜட்ஜ் ஸ்ரீமான். C. கிருஷ்னன் அவர்களுடைய ஜாதியார்தான்) எவ்வளவு அக்கிரமமாகும். இதை நாம் யார் பேரில் சொல்லுவது. இதற்கு பிரிட்டிஷ் அரசாங்கத்தார் எந்த விதத்தில் காரணமாவார்கள் பிராமண அரசாங்கத்தார்தானே இவ்வக்கிரமங்களுக்கும், கொடுமைக்கும், பாத்திரமாக வேண்டும். இந்த பிராமண அரசாங்கம் தொலைய வேண்டும்.இந்த பிராமணதர்மம் தொலையவேண்டும் என்று பாடுபடுவதை விட மக்களுக்கு வேறு என்ன தேச சேவையிருக்கிறது? இதைவிட வேறு ஜீவகாருண்யம் என்ன இருக்கிறது? இதைவிட வேறு தர்மம் என்ன இருக்கிறது? இதை அறிந்து தான் தேசபந்து தாசர்" என்னுடைய சுயராஜ்யம் பிராமண ஸ்திரீகளை பிடித்து தீண்டாதாருக்கு கொடுப்பது தான் என்றார்போலும்! இதைஅறிந்துதான் சர்.பி-சி-ரே அவர்கள் பிராமணர்களை எல்லாம் சாக்கில் போட்டுக்கட்டி வங்காளக்குடாக்கடலில் போடவேண்டும் என்று சொன்னார்கள் போலும்! சுவாமி விவேகாநந்தர் பிராமணமதம் இருக்கும்வரை இந்தியா அடிமைத்தனத்திலிருந்துமீளாது என்றுசொன்னார் போலும்! மகாத்மா காந்தி- இந்தியாவுக்கு பிரிட்டிஷார் செய்தகெடுதியைவிட பிராமணர்கள் செய்த கெடுதி குறைந்ததல்லவென்று சொன்னார் போலும்! சுவாமி சிரத்தானந்தர் இந்து மதத்திற்கு நாசத்தை விளைவித்தவர்கள் பிராமணர் தான் என்று சொன்னார் போலும்!—இனியார் இவர்களுக்கு நற்சாக்ஷி பத்திரம் கொடுக்க வேண்டுமோ தெரியவில்லை! இவர்கள் தான் சட்டசபைக்கும், மந்திரிவேலைக்கும், தாலூக்கா போர்டு, முனிசிபாலிட்டிக்கும், சர்க்கார் உத்தியோகங்களுக்கும் போய் நமக்கு நன்மை செய்பவர்களாம்.

குமரனும் ஊழியனும்.

சுயராஜ்யக்கட்சியைப்பற்றி குமரன் தலையங்கத்திலுள்ள சில குறிப்புகள்.

"சுயராஜ்யக்கட்சியானது தற்போதைய நிலைமையில் மிகப்பாராட்டத்தக்கதாயிருந்தும் நமது மாகாணத்தைப்பொருத்த மட்டில் அக்கட்சியானது நல்ல நிலையிலில்லை. அது இங்கு வளர்ச்சியடைகிறதென்று கூறவும் முடியவில்லை. இக்கட்சியானது சென்னைப் பத்திரிகைகளின் ஆரவாரத்தாலும், வாசாலகமாகப்பேசும் வல்லமையுள்ள சத்தியமூர்த்தி போன்றவராலும், செல்வாக்கு பெற்ற இரண்டொரு பிராமணத்தலைவர்களாலுமே இயங்கி வருகின்றதென்று கூறுவார் கூற்றை மறுப்பது எளிதன்று.

சென்னை மாகாண சுயராஜ்யக்கட்சியாரின் செல்வாக்கு பிராமண ஜாதியின் ஆதிக்கத்தைப் பலப்படுத்துவதற்குப் பெரிதும் உபயோகப்படுத்தப்படுகிறதென்ற உரையும் பொய்யென்று மறுப்பதற்கில்லை. இம்மாதிரியான நோக்கங்கள் அக்கட்சியின் முன்னணியில் நிற்பவர்களது உள்ளத்தில் பதிந்து கிடக்குமாயின் அக்கட்சி ஒரு நாளும் தமிழ் நாட்டில் வேரூன்றப் போவதில்லை. ஜாதிக்கொடுமையால் நைந்து புண்பட்டுக் கிடக்கும் தமிழ் நாட்டில் புதிய பிராமண சகாப்தத்தை உண்டாக்க சுயராஜ்யக்கட்சித் தலைவர்கள் எண்ணங்கொண்டு அரசியல் பேசமுன் வருகிறார்களென்பது உண்மையானால் அத்தலைவர்களது செல்வாக்கை அடியோடு ஒழித்தற்கு முயலல் வேண்டும்.

ஸ்ரீமான். எம். கே. ஆச்சாரியார் போன்ற மகான்கள் தோன்றி ஜாதீ வெறி பிடித்து தலை கால் தெரியாது மகாத்மாவையும் இகழ்ந்து வாய்கூசாது புன்மொழி வழங்கி வருவதையும் பார்த்து வருகிறோம்.

அவர் சென்னை சுயராஜ்யக்கட்சியில் ஒரு முக்கிய அங்கத்தினராவர். அவருக்கு சுயராஜ்யக்கட்சியின் முன்னணியாளர் ஆதரவளித்து வருகிறார்களென்பதையும் அறிகிறோம். இம்மாதிரியான சிறுமைக் குணங்களும் ஜாதி பிறு மாப்பும் கொண்டவர்கள் கையில் இக்கட்சியின் பொருப்பு இருக்கிறவரை உண்மையாக ஒன்றும் நடைபெறப்போவதில்லை,"

இவைகளில் சுயராஜ்ய கட்சியானது தற்போதைய நிலைமையில் மிகப் பாராட்டத்தக்கதாயிருந்தும் என்னும் வாக்கியம் தவிர மற்றதை நாம் ஒருவாறு ஒப்புக்கொள்ளுவோம்.

வௌவால் கட்சியாரின் தந்திரமாகிய "சுயராஜ்யக்கட்சி ஒன்றுதான் தற்கால நிலையில் பாராட்டத்தக்கது, தீவிர நோக்கமுள்ளது, அரசியல் கொள்கையுள்ளது" என்று பலவாராக தங்கள் மனச்சாட்சிக்கு விரோதமாய் அடிக்கடி பாடிவரும் பல்லவியை குமரனும் பாட ஆரம்பித்திருப்பது நமக்கு மிகவும் ஆச்சரியமாயிருக்கிறது.

ஊழியனாவது "காந்தியடிகள் ஆணை" என்னும் சாக்கைக்கொண்டு ஒதுங்கி நிற்கப்பார்க்கிறான். குமரனோ அதை விட ஓரடி முன்வந்து சுயராஜ்யக் கட்சி பாராட்டத் தக்கது என்கிறான். இராஜீய தந்திரத்தால் வாழவேண்டிய அவசியமில்லாதவர்களும், பயங்கொள்ளித்தன மில்லா தவீரர்களும் உள்ளன்போடும், பரோபகார சிந்தையோடும் "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்னும் மந்திரமே கொடியாய்க் கொண்டவர்களுமான குமரனும், ஊழியனும் கூட இத்திருவிளையாடல்கள்புரிவார்களானால் உலகில் என்னதான் எதிர்பார்க்க முடியாது.

சுயராஜ்யக்கட்சியாரின் எந்த நடவடிக்கையை குமரன் பாராட்டுகிறான் என்பதை உலகத்துக்கு விளங்கவைத்தால் குமரனைக் குருவாய்க்கொள்ளத் தயங்கோம்.

சுயராஜ்யக்கட்சியார் காந்தியடிகளின் கொள்கைகளை பாழாக்கினதையா? ஒத்துழையாமையைக் கொன்றதையா? காங்கிரசை ஏழை மக்கள் கையிலிருந்து தங்கள் சுயநலத்துக்காக பிடுங்கிக்கொண்டதையா? காந்தியடிகளை காங்கிரசை விட்டு ஓட்டினதையா? கதரில் நம்பிக்கையில்லை என்று செல்வதையா? ராட்டினம் சுற்றுவதால் சுயராஜ்யம் வரும் என்னும் நம்பிக்கை எங்களுக்கில்லையென்று சொல்லுவதையா? கல்கத்தா சட்டசபையில் மந்திரி பதவிகளை ஒழித்து சர்க்காருக்கே அவ்வதிகாரங்களையும் ஏகபோகமாய் பொருப்பின்றி நடத்தவிட்டுக்கொண்டு மேலே என்ன செய்வதென்று தெரியாமல் ஆப்பசைத்த குரங்கைப்போல் விழிப்பதையா? போக்குவருத்துக்காக வழிச்செலவு கூட வாங்கப்போவதில்லை என்று சொல்லி ஏமாற்றி சட்டசபைக்குப் போய் 4000, 5000 சம்பளமுள்ள பதவிகள் பெற்றதையா? பெறவிழைவதையா? கமிட்டிகளில் உத்தியோகம் அடைந்ததையா? தொழிலாளர் மசோதா சட்டசபையில் வந்தகாலத்தில் தொழிலாள சகோதரிகளான கருப்பஸ்திரீகளுக்கு பிள்ளைப்பேறு சமயத்தில் கூலியுடன் லீவு கொடுக்கவேண்டும் என்று வந்த தீர்மானத்தை நிறைவேறச்செய்யாமல் செய்த பாதகத்தையா? பிராமணரல்லாதாரை எதிர்க்கவேண்டியது தான் என்றும் அவர்களோடு ஒத்துழையாமை செய்ய வேண்டியது தான் என்றும் சென்னை சுயராஜ்யக்கட்சியாரும் பம்பாய் சுயராஜ்யக்கட்சிரும் முறையேசொல்லுவதையா? சுயராஜ்யக்கட்சித்தலைவர் ஸ்ரீமான். நேரு தனது உறவினருக்கு உத்தியோகம் வாங்கிக்கொடுத்ததையா? காரியதரிசி ஸ்ரீமான். ரங்கசாமி ஐயங்கார் தமது மகனுக்கு உத்தியோகம் வாங்கிக்கொண்டதையா? சென்னை சுயராஜ்யக்கட்சியின் தலைவர் ஸ்ரீமான். சீனிவாச ஐயங்கார் தீண்டாமை ஒழியவேண்டியது தான் ஆனால் இப்பொழுது அது சாத்தியப்படாது என்று புகல்வதையா? தீண்டாமை ராஜீய திட்டமாயிருக்கக்கூடாது என்று முணுமுணுப்பதையா?

தீண்டாமை ஒழிக்கும் கமிட்டிக்கு 25 ரூபாய் கொடுத்து விட்டு தீண்டாமை நிலைநிறுத்த ஏற்பட்ட கமிட்டிகளான வருணாச்சிரம தர்ம ஆதரிப்பு சபை முதலிய பிராமண சபைகளுக்கு மறை முகமாய் ஆயிரக்கணக்கான ரூபாய் கொடுத்து எதிர்ப்பிரசாரம் செய்யச் செய்வதையா? ஆதியில் அவர்கள் தம்பட்டம் போட்டுச் சொன்னதுபோல் நடந்து கொள்ளாததையா? சென்னை மகாணத்தில் சுயராஜ்யக் கட்சி நல்ல நிலையில் இல்லாமல் "பத்திரிக்கை', ஆரவாரத்தாலும், பிராமணத்தலைவராலும் இயங்கி வருவதையா? சென்னை சுயராஜ்யக் கட்சியின் செல்வாக்கால் பிராமண ஜாதியின் ஆதிக்கத்தைப் பலப்படுத்துவதையா? ஜாதிக்கொடுமையால் நைந்து புண்பட்டுக் கிடக்கும் தமிழ் நாட்டில் புதிய பிராமண சகாப்தத்தை உண்டாக்க எண்ணங்கொண்டு அரசியல் பேசுவதையா? அக்கட்சியின் முக்கியஸ்தரான ஸ்ரீமான் எம். கே. ஆச்சாரியார் போன்றவர்கள் ஜாதி வெறி பிடித்து மகாத்மாவை இகழ்ந்து வாய் கூசாது புன்மொழி வழங்குவதையா? ஷை ஆச்சாரியாருக்கு சுயராஜ்யக் கட்சியிலுள்ளவர்களும் ஆதரவளிப்பதையா? [illegible] ஜாதி இறுமாப்பு கொண்டவர்கள் கையில் சுயராஜ்யக் கட்சியிருப்பதையா? இவைகளில் எதை நமது அன்புள்ள சகோதரனான குமரன் பாராட்டுகிறானென்பது நமக்கு விளங்கவில்லை.

தீர்க்க தரிசனம்.

(1) 1926-ம் வருடம் பிப்ரவரி-மீ 11-உ முதல் 1927-ம் வருடம் ஆகஸ்டு-மீ 10-உ வரை இந்தியாவின் வடபாகத்தில் அரசர்களுக்குள் ஒரு மஹாயுத்தம் ஆரம்பமாகும். கொடிய மஹாயுத்தம் நடக்கப் போவதால் உத்தம மத்திய எல்லா ஜனங்களுக்கும் கொடுந்துன்பம் ஏற்படப்போகின்றன.

(2) 1927-ம் வருடம் செப்டம்பர்மீ 15-உ முதல் 1930-ம் வருடம் மே-மீ 26-உ வரை இந்தியாவிலிருந்து இலங்கை வரையும் மழைக்குறைவு உண்டாகப் போகின்றன. அன்றியும் மலைநாட்டுப்பிரதேசங்களிலும் மழை வளப்பங்குன்றி விடுவதால் பூமியில் கொடிய பஞ்சம் பரவுகின்றன. பூமியில் வேளாண்மையற்பம் விஷபேதி, விஷசுரம், வைசூரி முதலிய தொத்து வியாதிகள் பரவி எண்ணிக்கையற்ற ஜனங்கள் எமன்திசை ஏகுவர். உலகமெங்கும் பசி நோய் அதிகப்படுவதால் கொள்ளை, களவு, கலகம், இவைதோன்றி மேதாவியர்முதல் கயவர்வரை போர்க்களத்தில் இரத்தகளமானயுத்தஞ்செய்து அடங்கிவிடப்படாத ஜனங்கள் மரணமடைவர். ஆகையால் கொடிய பஞ்சகாலம் வரப்போகின்றன என்பது அறிந்து மூன்று வருடத்திற்கு வேண்டிய மட்டும் உணவுப்பொருள்களை சேகரித்துக் கொள்ளவேண்டுமென்று காருண்யம் நிறைந்த கனவான்களைத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறேன். என்று இளவரசம்நந்தல் தெற்கு ரத வீதி தீர்க்கதரிசி நிலயம் M. K. V. சுப்புசாமி, வானசாஸ்திரி, எழுதுகிறார்.

நமது நிலைமை.

பிராமணரல்லாதாருக்கு தற்போது மிகவும் நெருக்கடியான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. பிராமணரல்லாத தலைவர்கள் இன்னும் தங்கள் கடமையை சரியாக உணர்ந்து செய்யவேண்டிய வேலைகளைச் செய்யாமலிருக்கின்றனர். பிராமணர்கள் தங்களுக்குள் ராஜிய விஷயத்தில் பலதிறப்பட்டவர்களாக இருந்தும் தங்கள் சமூக வாழ்க்கையில் ஒன்று பட்டு பாடுபடுவதை அனுபவத்தில் நாம் பலமுறை கண்டும், நமக்குள் மட்டும் அவ்வித ஒற்றுமை யேற்படவில்லை. பிராமணரல்லாதார் பலகக்ஷிகளாகப் பிரிந்திருப்பதுடனில்லாமல் ஒவ்வொரு கட்சிகளிலிருக்கும் தலைவர்களுக்குள்ளும் ஒற்றுமை கிடையாது. ஜஸ்டிஸ் கட்சியை எடுத்துக்கொண்டால் தலைவர்களுக்குள் ஒற்றுமை இல்லை. அதிதீவிர ஒத்துழையாதார்களுக்குள்ளும் ஒற்றுமை இல்லை. சுயராஜ்ய கட்சியிலிருக்கும் பிராமணரல்லாதாரைப் பார்த்தால் அவர்களுக்குள்ளேயும் அப்படித்தானிருக்கிறது. இன்னும் சிலர் ஒருவிதக் கட்சியிலும் சேராமல் மௌனம் சாதித்துக் கொண்டு திகைக்கின்றனர். இந்நிலைமையில் இதுதான் சமயமென்று நமது பிராமண சகோதரர்கள் சுயராஜ்ய கட்சியின் பேரால் நம்மை தொலைப்பதற்கு பகிரதப்பிரயத்தினம் செய்து வருகிறார்கள். இன்னும் நாம் செய்யவேண்டிய வேலையைச் சரியானபடி செய்ய ஆரம்பிக்காவிட்டால், அடுத்த வருஷம் சட்டசபை முதலான தேர்தல்களில் பிறர் நகைக்கும்படியான கேவலமான நிலைமைக்குவர நேரிடலாம். சென்ற இரண்டு வருஷங்களாக நடை பெற்றுக் கொண்டிருக்கும் தேர்தல்களில் நாம் கோரியபடி ஜெயமடையாததற்குக் காரணம் நமக்குள் அதற்கு முன்னிருந்த சொற்ப ஒற்றுமையும் குறைந்து போனதும் தலைவர்களின் முயற்சி இன்மையும் தான். சென்னையில் தான் ஒற்றுமை இல்லை என்று சொல்வதற்கு இல்லை. வெளியூர்களில் அதைவிட மிகவும் கேவலமாக இருக்கிறது. நமக்குள் ஒற்றுமை ஏற்பட வேண்டுமானால், முதலில் பொறுமை இருக்க வேண்டும். இரண்டாவதாக சுயநலம் ஒழிய வேண்டும். மூன்றாவதாக பொறாமையை விரட்ட வேண்டும். நான்காவதாக வேஷதாரிகளுக்கு அவர்கள் எவ்வளவு பெரிய மனிதர்களாக தோன்றிய போதிலும் இடம் கொடுக்காமல் உண்மை உழைப்பாளிகளுக்கு இடம் தரவேண்டும். ஐந்தாவதாக நமக்குள் பரஸ்பரம் சகோதர உணர்ச்சியும் அன்பும் ஆதரவும் ஏற்படவேண்டும் இவ்விதிகளை நாம் இனி கடைப்பிடித்து ஒழுகினால் ஒற்றுமை தேவி ஒருநாளும் நம்மை விட்டு விலகமாட்டாள். நம்மை விடுவிக்கக்கூடிய உபாயங்களில் முக்கியமானவை கதரும் தீண்டாமையுமே. இவை இரண்டையும் எல்லாக்கட்சிகளிலுமுள்ள பிராமணரல்லாதார்கள் ஒத்துக்கொள்ளக் கூடியவைகள். மகாத்மா காந்தி அவர்கள் கடைசியாக வைத்துக்கொண்டிருக்கும் இந்த இரண்டு திட்டங்களுமே நமக்கு பேருதவி செய்யக் கூடியவை. அதை அறிந்தே நமது பிராமண சகோதரர்கள் கொஞ்சகாலமாக மகாத்மா அவர்களுக்கு தேசத்திலுள்ள அதிலும் முக்கியமாக நமது தமிழ் நாட்டிலுள்ள செல்வாக்கை குறைத்துக்கொண்டு வருகிறதற்காக மிகவும் தந்திரமாக பாடுபட்டுவருகிறார்கள். உதாரணமாக அவர்கள் உபந்நியாசங்களில் அவர் திருநாமத்தை வேஷத்திற்காக வெளிக்கு போற்றியபோதிலும் அடுத்தடுத்தாப்போல் அவர் கொள்கைகளை கண்டித்து பேசுகிறார்கள். அவர்கள் அவ்விதம் அவரை வாயளவில் பூஷித்து பேசுவதற்கு காரணமென்னவென்றால், அவர்கள் அப்படிச் செய்யாமல் அவர் கொள்கைகளை மட்டும் கண்டித்து பேசினால் ஜனங்கள் தங்களுக்கு அவரிடமுள்ள வெறுப்பைத்தெரிந்து கொண்டு தங்களை வெறுத்து விடுவார்கள் என்ற பயந்தான். ஜஸ்டிஸ் கக்ஷியாருக்கு தீண்டாமை புதிதல்ல. டாக்டர், நாயர் பெருமான் இந்தக்கக்ஷிக்கு இதைதான் அடிப்படையாக வைத்தாரம்பித்தார். சுதேச கைத்தொழில் அபிவிருத்தியிலும் அது நோக்கங்கொண்டிருப்பதால் அதற்குள் ஒன்றாகிய கதரும் மனமார ஏற்றுக்கொள்ளக்கூடியதே. தற்போது காங்கிரஸ் மகாசபை இருக்கும் நிலைமையைப்பார்க்கும் பொழுது இன்ன விதமான ராஜிய திட்டம் வைத்துக்கொண்டிருப்பவர்கள் தான் அதில் அங்கத்தினர்களாக இருக்க வேண்டுமென்பது ஒன்றுமில்லை. இனி அதில் அப்படி ஏற்படுமென்று நினைப்பதற்கும் இடமில்லை. எப்படி சுயராஜ்யக்கக்ஷியார் காங்கிரசிலும் அங்கத்தினர்களாக இருந்து கொண்டு தங்கள் ராஜீய திட்டத்தை தனியாக வைத்து நடத்திக்கொண்டு வருகிறார்களோ, அவ்விதமே ஜஸ்டிஸ்கக்ஷியாரும் காங்கிரசில் சேர்ந்து அதன் ராஜீய திட்டத்தை தனியாக வைத்து நடத்த வேண்டிய அவசியமான காலம் வரையில் நடத்திக்கொண்டுபோகலாம். அவ்விதம் ஜஸ்டிஸ் கக்ஷியார் செய்யவேண்டுமென்று ஸ்ரீமான். ஈ. வெ. ராமசாமி நாயக்கர், ஆரியா, டாக்டர் வரதராஜுலு நாயுடு முதலிய பிராமணரல்லாத தலைவர்கள் ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். அவ்விதம் சேர்ந்தால் இப்பொழுது காங்கிரசில் மதிலின் பேரிலிருக்கிற பூனைபோலிருக்கும் பிராமணரல்லாதார்களும் ஒன்றாக சேர்ந்து விடுவார்கள். அப்படிச் சேர்ந்து நமது தலைவர்கள் வருடந்தோறும் காங்கிரஸ் மகாசபை கூடும்பொழுது போய் நம்முடைய கஷ்டங்களையும் குறைகளையும் வற்புறுத்தி கூறுவார்களாகில் இந்தியா முழுவதும் நன்றாய் நம்முடைய குறைகளை தெரிந்து கொள்ளுவதற்கு சந்தர்ப்பம் ஏற்படுவதுடன் நமக்குமற்ற மாகாணங்களிலும் அநுதாபம் ஏற்பட்டுக்கொண்டு வரும். அப்படி காங்கிரசில் தற்போது ஜஸ்டிஸ் கக்ஷியார் சேரமுடியாவிட்டால் எல்லா கக்ஷிகளிலுமுள்ள பிராமணரல்லாதார் ஒன்றுபட்டு ஆசார திருத்தவிஷயங்களில் பாடுபடும்படியாக ராஜீயக்கொள்கைகளை விலக்கி கதரும் தீண்டாமையும் முக்கியமாக வைத்துக்கொண்டு ஒரு சங்கம் ஏற்படுத்தவேண்டும். இவைகளைப்பற்றி அடுத்த டிசம்பர் மாதத்தில் நடைபெறும் சென்னை ஜஸ்டிஸ் கக்ஷியார் கான்படரேஷனிலும் அகில இந்தியா பிராமணரல்லாத காங்கிரஸ் மகாசபையிலும் நன்றாய்யோசிக்க வேண்டும். அத்துடன் நாமும் நம்முடைய ஜனசமூகமும் நமது தாய் நாடும் அடிமைத்தனத்திலிருந்து நீங்க வேண்டுமானால் நம்முடைய தலைவர்கள் ஆங்காங்கு சென்று உபந்நியாசங்களை செய்து அறியாமையில் மூழ்கியும் பழக்கவழக்கங்கள் என்ற மாயவலையில் கட்டுண்டுகிடக்கும் நமது பாமர சகோதரர்களை தட்டி எழுப்பி அவர்கள் தங்கள் நிலைமையையும் கடமையையும் உணரும்படி செய்தும், வேஷதாரிகளையும் சூழ்ச்சிக்காரர்களையும் அறவே ஒழித்தும், குடி அரசு, திராவிடன், தமிழ் நாடு முதலிய தமிழ்ப்பத்திரிகைகளை விருத்தி செய்யவேண்டும்.

ஆர். சி. வெங்கட்டராம நாயுடு
வைஸ்பிரசிடெண்டு,
தாலூக்கா போர்டு கும்பகோணம்.

"தமிழ்க் குருகுலம்."

பாரத்துவாஜ ஆச்சிரம அங்கத்தினர்கள் கூட்டம் ஐப்பசி மீ உகந்தேதி சேரமாதேவியில் திரு. நாராயணய்யர் தலைமையிற் கூடியது. அக்கூட்டத்தில் குருகுல சம்பந்தமாகப் பின்கண்ட தீர்மானங்கள் செய்யப் பெற்றன.

சென்ற ஆனி-மீ கந்தேதியில் ஆசிரமிகள் அனைவரும் இருந்த கூட்டத்தில் காலஞ்சென்ற ஸ்ரீமான். வ. வெ. ஸு. ஐயரால் ஸ்தாபிக்கப்பட்ட மூன்று ஸ்தாபனங்களாகிய பால பாரதி, தமிழ்க் குருகுலம், பரத்துவாஜ ஆச்ரமம் இம் மூன்றையும் முன் போல் நடத்துவதென்று தீர்மானிக்கப் பட்டதற்கும் ஆசிரம விதிகளுக்கும் முற்றிலும் மாறாகத் தன் சொந்தப் பொறுப்பின் மேலேயே பால பாரதியை நிறுத்தியும், ஆசிரமத்தையும் அழிப்பதற்கு அதிக்கிரமமான வழிகளைக் கையாண்டும் குருகுலச் சொத்துக்களை ஆசிரமப் பொதுவில் வைக்காமல் தன் சொந்தத்திலேயே கையடக்கம் செய்து கொண்டும் ஆசிரமத்தின் ஆத்யாத்மிக லௌகிக அபிவிருத்திக்குப் பெரிதும் அழிவு தேடியும் குருகுலத்தை நீடித்து நடத்துவதற்கான முறைகளைக் கையாள மறுத்தும் இன்னும் பலவாறாகக் கிரமாதீத முறையில் நடந்து பாரத்துவாஜ ஆசிரமம், தமிழ்க் குருகுலம் இவற்றுக்கு ஆசாரியராயிருக்கத் தன்னை அனருகராக்கிக் கொண்டுள்ளமையின் மேற்படி ஸ்தாபனங்களின் ஆசாரிய பதவியினின்றும் ஸ்ரீமான். தி. ரா. மகாதேவய்யரை நீக்குவதென்று தீர்மானிக்கப்படுகிறது. தீர்மானம் ஏகோபித்து நிறைவேறியது.

ஆசிரம குருகுல நிதிகளைப் பெற்றுப் பொது பாங்கிகளில் போடாது தன் கையிலேயே வைத்துக்கொண்டிருப்பதால்,

ROJA MUTHIAH
47, HOSPITAL STREET
KOTTAIYUR-623 103
P. M. DIST-INDIA

ஆசிரம தனாதிகாரி பதவியினின்று ஸ்ரீமான் தி. ரா. மகாதேவய்யரை நீக்குகிறது. ஒருமனதாகத் தீர்மானம் நிறைவேறியது.

குருகுலத்தின் முழுப்பொறுப்பையும் ஏற்று நிர்வகித்து வருவதற்காக ஸ்ரீமான்கள் வயி. சு. சண்முகம் செட்டியார், ராய. சொக்கலிங்கச் செட்டியார், மு. காசிவிசுவநாதன் செட்டியார், சொ. முருகப்ப செட்டியார், எஸ் ராமநாதன், ஆசிரமப் பிரதிநிதியாக தி. நாராயணையர் ஆகிய வர்களோடு குருகுல ஆசாரியரையும்—(மேற்கண்ட பஞ்சாயத்தார் அறுவரால் குருகுலம் நடத்தப்படும்பொழுது தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிற ஆசாரியாரையும்) சேர்த்துப் பஞ்சாயத்தாக நியமிக்கிறது. தற்பொழுது மேலே கண்ட அறுவரையும் ஸ்ரீமான் தி. ரா. மகாதேவய்யரிடமிருந்து குருகுலச் சொத்துக்களைக் கைப்பற்றிக்கொள்ளும் உரிமைபெற்ற பஞ்சாயத்தாக நியமிக்கிறது. ஒருமனதாக நிறைவேறியது.

இந்தியன் பாங்கியிலிருந்து காரியதரிசிக்கு அனுப்பப்பட்ட கடிதம் படிக்கப்பட்டது. மேற்கண்ட தீர்மானங்களை இந்தியன் பாங்கிக்கு அனுப்புமாறு இக்கூட்டத்தலைவருக்கு அதிகாரம் கொடுக்கிறது. தீர்மானம் நிறைவேறியது.

குருகுலச் சொத்துக்களை ஸ்ரீமான். தி. ரா. மகாதேவய்யரவர்கள் ஏற்கனவே கைப்பற்றிக் கொண்டிருப்பதாலும், மீதியுள்ளதையும் கைப்பற்றுதற்கு முன்னால் அவசரமாக எடுத்துக்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள ஸ்ரீமான். வயி சு. ஷண்முகம் செட்டியாரவர்களுக்கு அதிகாரம் கொடுப்பதென்று தீர்மானிக்கப்படுகிறது அவ்வாறு வேண்டிய சகல நடவடிக்கைகளையும் எடுத்துக்கொள்ளுமாறு ஸ்ரீமான். வயி சு. ஷண்முகஞ் செட்டியாரவர்களை இக்கூட்டம் வேண்டிக்கொள்ளுகிறது. தீர்மானம் ஏகோபித்து நிறைவேறியது.

சபை அக்கிராசனர். தி. நாராணய்யர்.
சி. ஸுப்ரஹ்மண்ய சர்மா.
கு. கும்பலிங்கம்.
வி. சு, கிருஷ்ணமூர்த்தி.
ரா. அனந்தகிருஷ்ணன்.

பாரத்துவாஜ ஆசிரமம். } காரியதரிசி.
சேரமாதேவி, [illegible]-௧௧.

தமிழர் கூட்டம்.

குரோதன ௵ ஐப்பசி ௴ ௨௧ ௳ தமிழர் கூட்டம் திரு. ராய சொக்கலிங்கன் அவர்கள் தலைமையில் கானாடு காத்தான் வயி. சு. அவர்கள் வீட்டில் கூடியது.

“திருவாளர். வயி. சு. ஷண்முகஞ் செட்டியாரவர்கள் சேரமாதேவி சென்று குருகுல விஷயமாக, ஆசிரம அங்கத்தினர்களைக் கலந்ததில் ஆசிரம அங்கத்தினர்கள் ஆசிரமப் பொதுக்கூட்டம் ஐப்பசி ௨௧ ௳ கூடித்தீர்மானஞ்செய்த அசல் படிக்கப்பட்டது. அத்தீர்மானத்தில் அவர்கள் கண்டிருக்கும் பஞ்சாயத்தார் அறுவரும் குருகுலத்தை நடத்துவதை இக்கூட்டம் ஏற்றுக்கொள்ளுகிறது. அப்பஞ்சாயத்தார் இக்கூட்டத்தின் அபிப்பிராயப்பிரகாரம் எவ்வித வேறுபாடுமின்றி இக்குருகுலவாயிலாகத் தமிழர்கள் முன்னேற்றத்தில் நாட்டஞ்செலுத்துவார்களென்று இக்கூட்டம் நம்புவதால் இக்கூட்டம் களிக்கப் பெறுகின்றது. மேற்கண்ட பஞ்சாயத்தாருக்குத் தக்க ஆதரவு அளிக்குமாறு நமது தமிழர்களை இக்கூட்டம் கேட்டுக்கொள்ளுகிறது” என்று தீர்மானிக்கப்பட்டதாகக் காரியதரிசி அறிவிக்கிறார்.

மாயவரம்,

கும்பகோணம் ஜில்லா காங்கிரஸ் கமிட்டியின் அங்கத்தினர்களின் பொதுக்கூட்டம் 14-11-25 மாலை $5\frac{1}{2}$ மணிக்கு தாலூக்கா காங்கிரஸ் ஆபிசில் ஸ்ரீமான். M. கலியாணசுந்தர முதலியார் தலைமையில் நடைபெற்றது. ஸ்ரீமான்களான C. S. சாமிநாத செட்டியார் M. கலியாணசுந்தர முதலியார் V. சுப்பிரமணியன் கும்பகோணம் ஜனாப் M. S. பாபு சாகிப் முதலிய ஜில்லா அங்கத்தினர்களும் T சங்குண்ணி நாயர் S. வைத்தியலிங்கம் பிள்ளை R. முத்தையா பிள்ளை R. சிதாராம செட்டியார் முதலிய தாலூக்கா நிர்வாகிகளும் ஆஜராயிருந்தார்கள்.

நன்னிலம் தாலூக்காவின் ஜில்லாக்கமிட்டி அங்கத்தினர் ஸ்ரீமான். சாமிநாத ஜோஸ்யர் மேஷி தாலூக்கா நா. வி. கலியாணசுந்தரம் பிள்ளை முதலியவர்களின் கடிதங்கள் வாசிக்கப்பட்டது.

1925-26 க்கு ஜில்லா காங்கிரஸ் கமிட்டிக்கு கீழ் கண்டவர்கள் நிர்வாக உத்தியோகஸ்தர்களாக ஏகமனதாய் தேர்ந்தெடுக்கப்பட்டது.

ஸ்ரீமான்கள். பிரசிடெண்ட் C.S. சாமிநாத செட்டியாரவர்கள் செக்ரடரி, V. சுப்பிரமணியன் பொக்கிஷதார், M. கலியாணசுந்தர முதலியார் நிர்வாக அங்கத்தினர்கள் R. S. கந்தசாமி பிள்ளை, நன்னிலம் சிதரப்பதி ஸ்ரீமான். சாமிநாத ஜோஸ்யர் கும்பகோணம், ஜனாப் M.S. பாபு சாயபு பாபநாசம். பண்டாரவாடை நா. இ. காதுதுசாயபு கும்பகோணம், ஜில்லா கமிட்டி காரியாலயம் மாயவரம் பட்டமங்கலத்தெரு 74 நெ. கட்டடத்தில் இருக்க தீர்மானித்தது.

ஸ்ரீமான். R. S. கந்தசாமி பிள்ளையிடம் இருக்கும் பழைய ரிகார்டுகளையும், ஜில்லா கமிட்டி சம்பந்தப்பட்டவற்றையும் காரியதரிசி V. சுப்பிரமணியனிடம் ஒப்புவிக்கும்படியும் கேட்டுக்கொண்ட தீர்மானம் நிறைவேறியது.

காஞ்சிபுரம் தொண்டர் மகா நாட்டுத் தலைவராக ஸ்ரீமத் டாக்டர் P. வரதராஜுலு நாயுடுகாரு அவர்களை தேர்ந்தெடுக்கும்படி சிபார்சு செய்யப்பட்டது.

V. சுப்பிரமணியன்,
காரியதரிசி,
ஜில்லா காங்கிரஸ் கமிட்டி,
கும்பகோணம்.

மகாத்மா காந்தியின் நித்திய வாழ்க்கை.

சாதாரணமாக மகாத்மாகாந்தி இரவு 8 மணிக்குமேல் 9 மணிக்குள் படுக்கச்சென்று விடியற்காலை 4 மணிக்கு எழுந்து விடுவார். நெப்போலியனைப் போல் தூங்குவார். தூங்க விரும்பிப் படுத்துக்கொண்டால் அவர் ஒரு நிமிஷத்தில் அயர்ந்து நித்திரை செய்வார். பாட்னாவில் வேலை நெருக்கடியாக இருந்தபோது இடையில் 15 நிமிஷங்கள் இருந்தன. அப்போது முடியுமானால் தூங்கலாம் என்று அவரிடம் சொன்னார்கள். முடியுமானால் என்ற வார்த்தை வேண்டாமென்று அவர் தெரிவித்து உடனே படுத்தயர்ந்து நித்திரை செய்து 15 நிமிஷங்களில் எழுந்து விட்டார். சரீரமும் மனமும் இவ்வளவு நேர்த்தியாகப் பழக்கப்பட்டிருப்பதால் தினமும் இவ்வளவு அதிகமான வேலைகளைச் செய்ய அவர் சக்திவாய்ந்தவராகிறார்போலும். தினந்தோறும் காலை 4மணிக்கு எழுந்து காலைக்கடன்களை முடித்து 6மணிக்கு உணவு எடுத்துக் கொள்வார். பிறகு 10 அல்லது 11 மணிக்கு ஒரு தடவையும், மாலை சூரியாஸ்தமனத்திற்கு முன்னால் மூன்றாவது தடவையும் உணவு எடுத்துக் கொள்வார். ஐந்துவகை உணவிற்குமேல் எடுத்துக் கொள்வதில்லை என்ற ஒரு விரதம் மகாத்மாவுக்கு உண்டு. இதை ஒழுங்காக நிறைவேற்றுவதற்காக எப்போதும் நான்கு வகை உணவை மாத்திரம் ஏற்றுக் கொண்டு மற்றொன்றை எப்போதும் பாக்கியாகவே நிறுத்திவைப்பார். மூன்று வேளைகளிலும் ஒரேவகை உணவு அவருக்குக் கொடுபடவேண்டும். இந்த நான்கு வகைகளில் ஆட்டுப்பால் எப்போதும் உண்டு. ஒரு நாள் முழுவதிலும் அவர் இரண்டு சேர் (வங்காளச் சேர்) பால் சாப்பிடுகிறார். மற்றைய மூன்று வகைகளில் சாதாரணமாக பழங்களை எடுத்துக்கொள்கிறார். ஆரஞ்சுப் பழங்களும் மாம்பழங்களும் திராட்சை பழங்களும் ஆகிய பலவகைப்பழங்களில் ஏதேனும் மூன்று ஒவ்வொருநாளும் வேண்டும். வேறு எவ்வித திடபதார்த்தங்களுமின்றியிருந்தும் தேகம் திடமாக எதையும் தாங்கும் சக்தி கொண்டிருக்கின்றது. தினமும் பலமான வேலைகள் அதிகரிக்கின்றன. தவறாமல் ஸ்நானம் செய்வதும் தேகசுகத்திற்கும் பரிசுத்தத்திற்கும் அவசியமென்று மகாத்மா கருதுகிறார்.

வஞ்சிகேசரி.



அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவற்கும் ஆற்றி
மனத்துள்ளே பேதாபேதம்
வஞ்சம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன் றுண்டோ
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே.

குடி அரசு.

குரோதன-ஸு கார்த்திகை-மீ ௭-உ

தமிழ் தினசரி பத்திரிகை

இப்போது தமிழ்நாட்டில் உள்ள பெரும்பாலராகிய ஆதித் தமிழ் மக்களுக்கு மிகவும் முக்கியமாயும் அவசரமாயும் வேண்டியது பொதுநோக்குடைய ஒரு தமிழ் தினசரிபத்திரிக்கையே ஆகும். தமிழ்நாட்டில் தற்காலம் உலவிவரும் தமிழ் தினசரி பத்திரிக்கைகள் மூன்று. அதாவது சுதேசமித்திரன், திராவிடன், சுயராஜ்யா ஆகிய இவைகளே. இவற்றில் சுதேசமித்திரன் முதலில் தோன்றியது. இதன் முக்கிய கொள்கை பழய காங்கிரஸ் கொள்கைபோல் அரசாங்கத்தினிடம் இருந்து பதவிகளும் உத்தியோகமும் மக்கள் அடையக் கிளர்ச்சிசெய்வதாயிருந்தது. இதின்படி பதவிகளும் உத்தியோகங்களும் கிடைக்கக் கிடைக்க அவையெல்லாம் தங்கள் சமூகமாகிய பிராமணர்களுக்கே கிடைக்கும் படியாகவும் பிராமணர்கள் தான் உயர்ந்தவர்கள், அவர்கள் தான் அறிவாளிகள், என்றும் மற்றும் பிராமண மதம் ஆக்கம் பெறவும் உழைத்து வந்தது. இம்மட்டோடல்லாமல் வரவர பிராமணரல்லாதாருக்கு உயர்ந்த உத்தியோகங்களும், பதவிகளும், அந்தஸ்துகளும் கீர்த்திகளும் உண்டாவதைகூற்றுவன் போல் தின்றுதடுத்துக் கொண்டேயும் வந்தது. இச்சூழ்ச்சி வெகுகாலமாய் பிராமணரல்லாதாருக்கு தெரியாமல் இருந்துவிட்டதால் சகல பதவிகளும் அரசாங்கஉத்தியோகங்களும், அந்தஸ்தும், கீர்த்தியும், பிராமணர்களுக்கே கிடைத்து அரசாங்கமே பிராமணமயமாய் போய்விட்டதால் பிராமணரல்லாதார் நிலை தாழ்த்தப்பட்டது. அப்போது படித்திருந்த சில பிராமணரல்லாதார் சிலர் தாங்கள் எவ்வளவு கெட்டிக்காரராயும், யோக்கியர்களாயும், புத்திசாலிகளாயும் தேசபக்தி, பரோபகாரம் முதலிய அருங்குணங்கள் நிறைந்தவர்களாயுமிருந்தும் தாங்கள் ஏன் தாழ்த்தப்பட்டுக் கிடக்கின்றோம் என்று யோசனை செய்து பார்த்ததில் இப்பிராமண பத்திரிக்கைகளும் கட்டுப்பாடான பிராமண சூழ்ச்சிகளுமே இதற்கு காரணம் என்று கண்டுபிடித்து தாங்களும் மற்றவர்களைப் போல முன்னேறுவதற்கு தங்களுக்குள் ஒருகட்டுப்பாடு இருக்கவேண்டும் என்றும், தங்களுக்கும் பிரசாரத்திற்கு ஒரு பத்திரிகை வேண்டும் என்றும், கருதி ஒரு சங்கத்தையும் திராவிடன், ஜஸ்டிஸ் என்கிற பத்திரிக்கைகளையும் ஏற்படுத்தினார்கள். இப்பத்திரிக்கையும் சங்கமும் சகல போக்கியங்களையும் தாங்களே ஏகபோகமாய் அனுபவித்துவந்த சுதேசமித்திரன் போன்ற பத்திரிக்கைக்கும், அதன் கூட்டத்தாருக்கும், இவை போட்டியாய்க் கண்டதால் இவற்றைச் செல்வாக்கில்லாமலடித்து ஒழிக்க பலதந்திரங்களும் செய்ததினால் இத்தந்திரங்களுக்கு தாக்குபிடிக்க சுதேசமித்திரன் போலவும் அதன் கூட்டத்தார் போலவும் திராவிடனும் அதன் கூட்டத்தாரும் அரசாங்கத்தை தழுவ நேரிட்டது. என்ன செய்தும் சுதேசமித்திரன் கூட்டத்திற்குள்ள தந்திரசக்தி திராவிடன் கூட்டத்திற்கில்லாததாலும் பிராமணரல்லாதாரில் சிலருக்கு தங்கள் தனிப்பட்ட சுயநலத்திற்கும், கீர்த்திக்கும் சுதேசமித்திரன் கூட்டம் இடங்கொடுத்ததால் இவர்களும் அதோடுசேர்ந்து எதிர்பிரசாரம் செய்ததாலும், திராவிடனுக்கு பாமர ஜனங்கள் உண்மையை உணரும்படி செய்யவும் பாமர ஜனங்களிடத்தில் செல்வாக்கு பெறவும் முடியாமல் போய்விட்டதால் இது தக்க பலனை தென்னிந்திய மக்களுக்கு அளிக்கக்கூடியதாய் இல்லாமலிருக்கிறது. இதுதான் இப்படி என்றாலோ மகாத்மா ஏழை மக்கள் விடுதலையின் பொருட்டு காங்கிரசில் சேர்ந்து ஒத்துழையாமை என்னும் கொள்கையை உண்டாக்கி நிர்மாணத்திட்டம் என சில திட்டங்களைக் கண்டு வேலை செய்த காலத்தில் ஒத்துழையாமையும், நிர்மாண திட்டமும், தங்கள் கூட்டத்தாருக்கும், சுயநலப்புலிகளுக்கும் கஷ்டத்தைக் கொடுப்பதாய் இருந்ததால் ஒத்துழையாமையும், நிர்மாண திட்டத்தையும் மகாத்மா செல்வாக்கையும் அழிக்க சுதேசமித்திரன் பிரசாரம் செய்துவந்த காலத்தில் ஒத்துழையாமையினும் நிர்மாணத்திட்டத்தினும் மகாத்மாவிடமும் ஈடுபட்டிருந்த சிலர் சுதேசமித்திரனால் தேசத்திற்கு ஏற்படும் கெடுதியைத் தடுக்க ஒரு தினசரி ஏற்படுத்த எண்ணினார்கள். அதுசமயம் ஆங்கில சுயராஜ்ய பத்திரிகை மக்கள் நம்பக்கூடியதுபோல் நடந்துவந்ததால் பொதுமக்கள் பணமாகிய 10,000 ரூபாயை தூக்கி அதன் முக்கியஸ்தரான ஸ்ரீமான் பிரகாசத்தினிடம் கொடுத்து தினசரி ஆரம்பிக்கச்சொன்னார்கள். கடைசியாய் சுதேசமித்திரன் திட்டமும் சுயராஜ்யா திட்டமும் வித்தியாசமற்றதாகி இரண்டும் ஒன்றுபடக் கலந்து விட்டதால் – புதுத் திருடனைவிட பழைய திருடனே மேல் என்னும் பழமொழிபோல் இரண்டும் ஒன்றுசேர்ந்து கொண்டு பிராமணர்கள் ஆக்கம் பெறவும் பிராமணரல்லாதாரின் அழிவுக்கும் ஒத்து வேலை செய்கின்றன. இதில் ஒருவிசேஷம் சுதேசமித்திரன் ஒருவிதத்தில் சுயராஜ்யாவைவிட யோக்கியன் என்றே சொல்லலாம். எப்படி என்றால் "சுதேசமித்திரன்" தான் ஒரு பிராமணனைத்தன் ஆசிரியராகக் கொண்டிருக்கிறேன் என்று உண்மையே பேசுகிறான். சுயராஜ்யவோ, இரண்டு பிராமணரல்லாதாரை ஆசிரியராய் வைத்திருப்பதாய் பொய்சொல்லிக் கொண்டு மக்களை ஏமாற்றி தனது அட்டூழியங்களை நடத்துகிறது. பத்திரிக்கைகள் யோக்கியமாய் நடந்திருந்தால் தென்னிந்தியாவில் ஒத்துழையாமை ஒழிந்து சுயராஜ்ய கட்சியின் சூழ்ச்சி நடந்திருக்குமா? இந்நிலையில் தென்னிந்தியாவுக்கு, தென்னிந்தியர்களுக்கு ஒரு நம்பிக்கையும் யோக்கியமுமுள்ள தமிழ் தினசரி பத்திரிக்கை வேண்டுமா வேண்டாமா என்று யோசிக்கவேண்டும். வேண்டுமென்றால் சுலபத்தில் நடத்திவிட முடியாது சுதேசமித்திரனின் போட்டியையும் கெடுதியையும் சமாளிப்பது லேசான காரியமல்ல – அதற்கு பிராமணரல்லாதார் பொருள்களும் பிராமணரல்லாதார் சந்தாதாரர்களும் பிராமணரல்லாத சுயநலப்புலிகள் ஆதரவும், சாறுயவிற்பனை முதலிய விளம்பரவரும்படிகளும் மலிந்து கிடக்கிறது ஆதலால் நாம் ஆரம்பிப்பதானால் தக்க மூலதனத்துடனும் தக்க ஏற்பாட்டுடனும் தான் ஆரம்பிக்க வேண்டும் குறைந்தது ஒரு லக்ஷரூபாய் மூலதனம் வேண்டும். ஒரு வருஷத்தில் 10000 சந்தாதாரர்கள் சேரவேண்டும் 50000 ரூபாயாவது இல்லாமல் ஆரம்பிப்பது நிலைபெறத்தக்கதாகாது. குறைந்த அளவு 5 வருஷ காலத்துக்கு குறையாமல் பத்திரிகை நடத்தக்கூடிய மூலதனங்களை கையில் வைத்துக்கொண்டு ஆரம்பித்தாலல்லாது எதிர்பார்க்கும் பலனை அடையமுடியாது. ஆதலால் இவைகளைப்பற்றி சில கனவான்களோடு யோசனை செய்துபார்த்ததில் அடியில்கண்ட விஷயங்கள் புலப்பட்டன. அதாவது பங்கு 1-க்கு 5 ரூபாய் வீதம் 20000 ஆயிரம் பங்கு கொண்ட ஒரு லக்ஷ ரூபாய் மூலதனம் வேண்டும் 50000 ரூ வசூலித்த பிறகு தான் பத்திரிகை ஆரம்பிக்க வேண்டும் தமிழ் ஜில்லாக்களாகிய 12 ஜில்லாக்களும் ஜில்லா ஒன்றுக்கு 5000 ரூ வீதம் மூலதனம் வசூலித்துக் கொடுக்கவேண்டும். ஒவ்வொரு ஜில்லாவிலும் 1000 ரூ கொடுக்கக்கூடிய இரண்டுபேர்கள் அவசியம் முன் வருவதோடு பாக்கி மூவாயிரம் ரூபாயையும் வசூலித்து கொடுக்க அவர்கள் ஒப்புக்கொள்ளவேண்டும் – ஆயிரம் கொடுப்பவர்களும் ஊதியமில்லாமல் உழைக்க வருபவர்களும், நிர்வாகிகளாக இருக்கவேண்டும். பத்திரிகையின் கொள்கை. பிராமணரல்லாதாருடையவும் தீண்டாதாருடையவும், சமத்துவமும், முன்னேற்றமுமே முக்கியமான தாயிருக்கவேண்டும். பத்திரிகையின் நேரான நிர்வாகமும் பதிப்பும் யோக்கியமான ஒரு சிறு போர்டினிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் இப்போர்டிலுள்ளவர்கள் பத்திரிகை நிருவாகம் பதிப்பு இவைகளைத்தவிர வேறு எந்த பொதுகாரியங்களிலும் சம்பந்தபடாதவர்களாயிருக்க வேண்டும் – குறைந்தது 5 வருஷத்திற்கு ஒருதரம் இந்த போர்டை புதுப்பிக்கத்தக்கதாயிருக்க வேண்டும். இக்கொள்கைக்கு இதுவரை சிலசெல்வாக்குள்ள கனவான்கள் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். ஆகையால் இதைப்பற்றித் தமிழ் மக்கள் யோசித்து ஒருமுடிவுக்கு வந்தால் தமிழ் மக்களுக்கு ஏதாவது சுயமரியாதை உண்டாகலாம் என்று விண்ணப்பித்துக் கொள்ளுகிறோம்.

சுயராஜ்யக் கட்சியும் அதன் தலைவர்களும்.

சுயராஜ்யக் கட்சியின் பொதுக் காரியதரிசியாகிய ஸ்ரீமான். ஏ. ரங்கசாமி ஐயங்கார் இந்திய சட்டசபையின் மெம்பராயிருப்பதன் பயனாய் இந்தியா கவர்ன்மெண்டின் தயவைப்பெற்று தப்பானவழியில் தன் மகனுக்கு ஓர் பெரிய உத்தியோகம் சம்பாதித்துக்கொண்டதையும் அரசாங்க கமிட்டிகளில் தான் மெம்பர் உத்தியோகம் பெற்றுக் கொண்டதையும் இதற்கு முன்பே "குடி அரசில்" குறிப்பிட்டது வாசகர்களுக்கு ஞாபகமிருக்கலாம். சுயராஜ்யக் கட்சியின் பெருந்தலைவரான ஸ்ரீமான். பண்டித நேரு அவர்களும் இதே மாதிரியே சர்க்காரின் ராணுவக்கமிட்டியில் அங்கம் பெற்றிருப்பதையும், அதற்காக சர்க்காருக்கு யோசனை சொல்ல பல விஷயங்களை அறிந்துவர என்கிற சாக்கின் பேரில் சர்க்கார் செலவிலேயே சீமைக்குப் போகப் போகிறாரென்பதும் வாசகர்கள் அறிந்ததே. இவை மாத்திரமல்லாமல் இன்னொரு ரகசியத்தையும் ஸ்ரீமான். விபினசந்திரபாலரவர்கள் வெளியாக்கி விட்டார். அதாவது பண்டிதநேரு அவர்கள் சட்டசபை உத்தியோகம் சம்பாதித்துக் கொடுத்தவரும் அவருக்கு நெருங்கின, கட்டுப்பட்ட பந்துவுமான ஒருவர் ஸ்ரீமான். ஏ. ரங்கசாமி ஐயங்காரைப்போலவே தனது பதவியின் செல்வாக்கால் சர்க்காரின் தயவு பெற்று தன்னுடைய மகனுக்கு ராணுவ உத்தியோகத்தில் ஒரு பெரிய பதவி பெற்றிருப்பதாகவும், இதை ஸ்ரீமான். ஷாம்லால் நேரு அவர்களே என்னிடம் சொன்னாரென்றும், இது ஸ்ரீமான் ஏ. ரங்கசாமி ஐயங்காரின் நடத்தைக்குக் கொஞ்சமும் இளைத்ததல்லவென்றும், ஸ்ரீமான். விபினசந்திரபாலரவர்கள் இங்கிலீஸ்மென் பத்திரிக்கையில் எழுதியிருக்கிறார். இதைப் பற்றி ஸ்ரீமான். ரங்கசாமி ஐயங்காராவது பண்டிதராவது தங்களுக்காகவாகிலும், கட்சிக்காகவாகிலும் இவ்வித நடவடிக்கைக்கு இதுவரையில் எவ்வித மறுப்பாவது, சமாதானமாவது எழுதினவர்களுமல்ல. ஸ்ரீமான். தம்பே சுயராஜ்யக் கட்சி மெம்பராயிருந்து மத்தியமாகாண நிருவாக சபை அங்கத்தினர் பதவி பெற்ற துரோகத்தை கண்டித்த சுயராஜ்யக் கட்சியின் மற்ற அங்கத்தினராவது ஸ்ரீமான். ஐயங்காரையும், பண்டித நேருக்களையும் கண்டித்தவர்களுமல்ல. ஸ்ரீமான். ஏ. ரங்கசாமி ஐயங்கார் ஜஸ்டிஸ் கட்சி உத்தியோக வேட்டையாடுகிறது மிதவாதக்கட்சி உத்தியோக வேட்டையாடுகிறது சுயராஜ்யக்கட்சியார் ஆகிய நாங்கள் பதிவிரதைகள் சர்க்கார் சம்பந்தமான எந்த உத்தியோகத்திற்கும் ஆசைப்படமாட்டோம் அது ரொம்பவும் தேசத்துரோகமானது காங்கிரஸ் ஒத்துழையாமையை விட்டுவிட்ட போதிலும் சுயராஜ்யக்கட்சியார் ஒத்துழையாமையை கைவிடப்போவதில்லையென்றும், எங்களை தெரிந்தெடுத்தால் சட்டசபைக்குள்ளேபோய் சர்க்காரை எவ்வித நடவடிக்கையையும் நடத்த விடாமல் முட்டுக்கட்டைபோட்டு தடுத்து விடுவோமென்றும், சர்க்கார் காக்காய் கருப்பென்றால்கூட நாங்கள் வெள்ளையென்றே தான் சொல்லுவோம் என்றும், எங்கள் காரியம் பலிக்காவிட்டால் உடனே வெளியே வந்து விடுவோம் வெளியில் வந்தவுடன் சட்டமறுப்பு ஆரம்பித்து நாங்களெல்லோரும் ஜெயிலுக்குப் போவோம் எங்களுடையபோக்குவருத்து வழிச்செலவுகூட சர்க்காரிடமிருந்து பெறமாட்டோம் என்றும், பாமர ஜனங்களான ஓட்டர்களிடம் பொய்யையும் புளுகையும் வண்டி வண்டியாய் அளந்து ஓட்டர்களை ஏமாற்றி சட்டசபைக்குச்சென்று "அநித்திரானி சரீரானி அந்தரு சொம்முமனக்கே ரானி" என்பதுபோல் சகல உத்தியோகமும் சகல பதவிகளும் மிகவும் பர்வமானது ஆனால் அதுகள் முழுதும் எங்களுக்கே கிடைக்கவேண்டும் மிதவாதிகளே! உங்களுக்கும் கொடுக்கமாட்டோம். ஜஸ்டிஸ் கட்சிக்காரர்களே! உங்களுக்கும் கொடுக்கமாட்டோம் உங்களுக்கேதாவது கண்டிப்பாய் உத்தியோகம் பெற்றுத்தான் ஆகவேண்டுமென்கிற ஆசையிருக்குமானால், எங்கள் கட்சியில் வந்து சேருங்கள். "அதாவது வரும்போது நீங்கள் அரிசி கொண்டு வாருங்கள் எங்களிடத்தில் உமியிருக்கிறது இரண்டையும் கலந்து ஊதி ஊதி இரண்டுபேரும் சாப்பிடலாம்" என்று சொல்லும் சுயராஜ்யக்கட்சியாரின் யோக்கிதையை பொது ஜனங்கள் இப்பொழுதாவது தெரிந்துகொண்டிருப்பார்களென்று எண்ணுகிறோம். போதாக்குறைக்கு இந்த தடவையும் ஓட்டர்களை ஏமாற்றி சட்டசபைக்குப்போய் உத்தியோகம்பெறுவதற்காகதைரியமாய்ப்பொய் சொல்ல ஆரம்பித்துவிட்டார்கள். அதென்னவென்றால் பண்டித நேரு அவர்கள் சட்ட மறுப்பு ஆரம்பிக்கப்போகிறோம், எங்களை மறுபடியும் சட்டசபைக்கு அனுப்புங்களென்ற பழைய மந்திரத்தையே இப்பொழுதும் ஜெபிக்கத் தொடங்கி விட்டது தான். சட்டமறுப்பு தொடங்குவதாயிருந்தால் இவர்களை யார் வேண்டாமென்று சொன்னார்கள். இதற்குமுன் சந்தர்ப்பம் கிடைக்கவில்லையா மகாத்மா சட்டமறுப்பு ஆரம்பித்த காலத்தில் ஸ்ரீமான்களான ஸ்ரீனிவாசய்யங்காரும் ரெங்கசாமி ஐயங்காரும் சத்தியமூர்த்தியும் எம். கே. ஆச்சாரியாரும் எந்த உலகத்திலிருந்தார்கள் வங்காளத்தில் மந்திரிபதவிபெறபட்டவுடன் அவ்விலாக்காக்களை சர்க்கார்யெடுத்துக் கொண்டு ஏகபோகமாய் நடத்த ஆரம்பித்தார்களே அப்பொழுது இவர்கள் எங்கே போய் விட்டார்கள். சட்டசபையில் கொண்டுபோய் நிறைவேற்றிய தீர்மானங்களை வைசிராய்பிரபு குப்பைத்தொட்டியில் போட்டாரே அப்பொழுது எங்கே போய்விட்டார்கள். பர்க்கென்ஹெட் பிரபு எவ்வித சீர்திருத்தத்துக்கும் இனிமேல் நீங்கள் லாயக்கில்லையென்று சொல்லிவிட்டாரே அப்பொழுது என்ன செய்துகொண்டிருந்தார்கள். வங்காளத்தில் அவசரச் சட்டத்தைக் கொண்டுவந்து அநேக நிரபராதிகளை ஜெயிலில் பிடித்தடைத்தார்களே அப்பொழுது சட்ட மறுப்பு எங்கே போய்விட்டது. சட்ட சபைத் தேர்தல்கள் நடக்கிற சமயத்தில் மாத்திரம் சட்ட மறுப்பு, சட்டமறுப்பு என்று சொல்லிக்கொண்டு பாமர ஜனங்களை ஏமாற்றி சட்ட சபைக்கு போனவுடன் தாங்களும், தங்கள் பிள்ளை குட்டிகளும், தங்கள் பந்துக்களும், உத்தியோகம் சம்பாதிப்பது தான் சட்டசபை மறுப்பாய் போய்விடுகிறது. இதை இன்னமும் பொது ஜனங்கள் உணரவில்லை என்பது நமக்கு பெருத்த ஆச்சரியமாகத் தானிருக்கிறது. 'சுயராஜ்யக் கட்சியின் திட்டத்தில் நமக்கு நம்பிக்கையில்லை அக்கட்சியாரும் யோக்கியமாய் நடந்துகொள்ளவில்லை. ஆனாலும் அதொன்றுதான் தீவிர அரசியல் கொள்கையுடைத்தாயிருக்கிறது. ஆதலால் அதை ஆதரிக்க வேண்டியது நமதுகடமை" என்று சொல்வோரின் கூற்று அதை விட நமக்கு ஆச்சரியமாயிருக்கிறது நம்பிக்கை இல்லாத திட்டத்தை உடைய கட்சியும் யோக்கியமாய் நடந்துகொள்ளாதவர்களால் நடத்தும் கட்சியும் எப்படி அதிதீவிரக் கட்சியாய் விடுமோ! எதை உத்தேசித்து—அதை ஆதரிக்க வேண்டியது இவர்கள் கடமையோ இது கடவுளுக்குத்தான் தெரியவேண்டும். இவர்களுடைய தேசம் சுயராஜ்ய மடையுமென்று நினைப்பது அமாவாசையன்று பூரணச்சந்திரனை பார்க்கலாம் என்பது போலத்தான் முடியுமென்று சொல்ல நாம் வருந்துகிறோம்.

தேவஸ்தான மசோதா.

சென்னை மகாணத்தில் தேவஸ்தானங்களும் தர்ம ஸ்தானபனங்களும் இந்து மத ஸ்தாபனங்களும் மொத்தத்தில் கோடிக்கணக்கான வரும்படி உடையதுகளாயிருந்தும் அவைகள் குறிப்பிட்ட காரியங்களுக்கு உபயோகப்படாமல் பெரும்பாலும் பிராமணர்களும், தாசி வேசி முதலிய விபசாரிகளும், வக்கீல்களும், அனுபவிக்கவும் தேவஸ்தான "ட்ரஸ்டி" என்போர்களும் மடாதிபதியென்போர்களும் சமயாச்சாரி என்போர்களும் லோககுரு என்போர்களும் மகந்துக்கள் என்போர்களும் சுயமாய் தங்கள் இஷ்டம்போல் அனுபவிக்கவும் கொலை களவு கள்குடி விபசாரம் முதலிய பஞ்சமா பாதகங்களுக்கு உபயோகப்படுத்தவும், சோம்பேரிகளுக்கும் விபசாரத்தரகர்களுக்கும் பொங்கிப்போடவும், உபயோகப்படுத்திக்கொண்டு வருவதை தென்னிந்தியர்கள் வெகுகாலமாய் அறிந்து வந்திருக்கிறார்களென்பதை நாம் கூறத்தேவையில்லை. அதன் பலனாய் "காங்கிரஸ் கான்பரன்ஸ்" என்று சொல்லப்படும் ராஜீய ஸ்தாபனங்களின் மூலமாயும், பல சமய சபைகள் மூலமாயும், இவ்வக்கிரமங்களையெல்லாம் அடக்கிக் கோடிக்கணக்கான வரும்படியுள்ள சொத்துக்கள் ஒழுங்காய் பரிபாலிக்கப் படவும், அதன் வரும்படிகள் குறிப்பிட்ட விஷயங்களுக்கு கிரமமாய் உபயோகிக்கப்படவும், மீதியிருந்தால் இந்து மத சம்பந்தமான ஒழுக்கங்கற்பிக்க பொது ஜனங்களுக்கு உபயோகப்படவும்

தக்கதான ஓர் சட்டம் செய்ய வேண்டியது நமது அரசாங்கத்தின் முக்கிய கடமையென்றும், கொஞ்சமும் காலதாமதம் செய்யாமல் உடனே செய்யப்படவேண்டியது மிகவும் அவசியமானதென்றும், இதுவரை செய்யாமல் அரசாங்கத்தார் கவலையீனமாயிருந்தது பெரிய குற்றமென்றும், இதற்கு முன் இதற்காக ஆயிரத்தெட்டு நூற்றுப் பதினேழிலும், ஆயிரத்தெட்டுநூற்றுஅருபத்திமூன்றிலும் அரசாங்கத்தாரால்செய்யப்பட்டிருக்கும் இந்துமத தர்மசொத்துக்கள் பரிபாலன சட்டம் போதுமான அளவு பந்தோபஸ்தளிக்கக் கூடியதாயில்லையென்றும், பல தீர்மானங்களைச்செய்து அரசாங்கத்திற்கு அனுப்பியுமிருக்கிறது, உதாரணமாக ஈரோட்டில் 1915 வருஷம் ஜூலை மாதம் 24, 25 தேதிகளில் டாக்டர் **T. M.** நாயர் அவர்கள் அக்கிராசனத்தின் கீழ்நடந்த கோயமுத்தூர் ஜில்லா இரண்டாவது கான்பரன்ஸ் என்னும் ராஜீயமகாநாட்டில், 8 வது தீர்மானமாக அடியிற்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அதாவது "தர்ம ஸ்தாபனங்கள் மதசம்பந்தமான தேவாலயங்கள் சரிவர பரிபாலனம் செய்யப்படாததால் கிரமமாய் நடக்கும் வண்ணம் இப்போதிருக்கிற சட்டத்தை கொஞ்சமேனும் தாமதிக்காமல் சீர்திருத்தம் செய்து மாற்றிவிட வேண்டுமென்று கவர்ன்மெண்டாரை இக்கூட்டம் வற்புறுத்துகிறது" (இந்த தீர்மானத்தை ஸ்ரீமான். B. V. நரசிம்ம ஐயர்தான் பிரேரேபித்திருக்கிறார் என்பது நமது ஞாபகம்) இவற்றை அனுசரித்தே சர்க்காரிலுள்ள இது சம்பந்தமான அதிகாரம் ஒரு இந்திய மந்திரியின் கைக்கு வந்ததும் அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்து "சென்னை இந்து மத பரிபாலன மசோதா" என்னும் பெயரால் ஓர் சட்டத்தை இயற்றி பொது மக்கள் பிரதிநிதியென்று சொல்லும் சட்டசபை அங்கத்தினர்களின் சம்மதம் பெற்று நிறைவேற்றி அமுலுக்கு கொண்டுவரப்பட்டிருக்கிறது. இந்தச்சட்டமானது மேலே குறிப்பிட்டபடி தர்மசொத்துக்களை அதன் கிரமமான உபயோகத்திற்கு அன்றி, தங்களுடைய சுயநலத்துக்காக உபயோகித்துக்கொண்டு வந்த சில மடாதிபதிகளுக்கும் பொது மக்கள் தர்ம சொத்தை தங்கள் வகுப்பார்களே உண்ணவேணும் என்னும் கருத்தின் பேரில் சூழ்ச்சி செய்து பொது மக்களிடம் பணம் பறித்து தங்கள் வகுப்பார்க்கே பொங்கிப் போட்டுக் கொண்டிருந்த சில சமயாச்சாரிகளென்போரான சில பிராமணர்களுக்கும், அதன் பலனைத் தின்று கொழுத்துத் திரிந்து கொண்டிருக்கும் சில திண்ணைத் தூங்கிகளுக்கும், இவர்களின் நிச்செயல்களுக்கு அனுகூலமாயிருந்து பணம் பறித்துக் கொண்டிருந்த வக்கீல்கள், பஞ்சமகா பாதகத்தாரகர்கள், முதலியவர்களுக்கும், விரோதமாயிருந்த படியாலும், இக்கூட்டத்தார் பெரும்பாலும் பிராமணர்களென்று சொல்லப்படுவோராயிருந்து விட்டபடியாலும், இவைகளுக்கு ஏராளமான சொத்துக்கள் விட்டவர்களும், இன்னமும் கொடுத்துக் கொண்டிருக்கிறவர்களும், பிராமணரல்லாதாராயிருப்பதனாலும், இந்த சட்டமானது பிராமணர்களுக்கு விரோதமாகவும், பிராமணரல்லாதார்களுக்கு அனுகூலமாகவும் இருப்பதாக ஏற்பட்டுப்போய் விட்டது. இதனால் இக்கூட்டத்தைச் சேர்ந்த பிராமணர்களெல்லாம் ஒன்று சேர்ந்து இந்தச் சட்டமானது மதத்திற்கு விரோதமானது என்றும், மதமே போய் விட்டதென்றும், சர்க்காரார் இந்துமதத்தில் பிரவேசித்து விட்டார்களென்றும், ஜஸ்டிஸ்கட்சி மெம்பர்களும் மந்திரிகளும் இச்சட்டத்தை உண்டாக்க அனுகூலமாயிருந்தார்களென்றும், பொய்யழுகை யழுதும் பொய்ப்பழி சுமத்தியும், தங்கள் ஜாதிப்பத்திரிகைகளான "இந்து," "சுதேசமித்திரன்," "சுயராஜ்யா," முதலிய பிராமணப்பத்திரிக்கைகள் மூலமாய் சூழ்ச்சிப்பிரசாரம் செய்தும் பிராமணரல்லாதாரான சில அப்பாவிகளை ஏமாற்றியும், பிராமண கீர்த்திக்கு ஆசைப்பட்ட சில பயங்கொள்ளிகளை சுவாதீனம் செய்துகொண்டும் இச்சட்டத்தை ஒரேயடியாய் தொலைத்துவிட தங்களாலான முயற்சிகளெல்லாம் செய்துபார்த்தார்கள். ஜஸ்டிஸ் கட்சி மந்திரிகள் மெம்பர்கள் முதலானவர்களுடைய உறுதியினாலும் முயற்சியினாலும் ஸ்ரீமான்களான ஈ. வெ. ராமசாமிநாய்க்கர் வரதராஜுலு நாயுடு முதலியவர்கள் இந்த சட்டத்தின் அனுகூலத்தை பொது ஜனங்களுக்கு எடுத்துக் காட்டி இந்து மதத்திற்கும் இந்துமதபரிபாலனத்திற்கும் இச்சட்டத்தால் யாதொரு கெடுதியும் உண்டாகாதென்றும் ஆனால் ஊரார் முதலைதின்று வாழ்வதுதான் தர்மமென்ற கொள்கையை உடைய பிராமண மதத்திற்குதான் ஒரு சமயம் ஆபத்து வந்தாலும்வரலாமென்றும் பத்திரிக்கைமூலமாகவும், பிரசங்கமூலமாகவும் பொதுஜனங்களுக்கு வெளிப்படுத்தியதின் பேரில், பிராமணர்களின் விஷமப்பிரசாரம் ஒரு வாறாய் வெளிப்படையாய் குறைந்தது என்றாலும் இன்றைக்கும் ரகசியத்தில் எவ்வளவோ தந்திரங்களும் மந்திரங்களும் நடந்துகொண்டுதான் வருகிறது. இதற்கு அநுகூலமாய் நமது மடாதிபதிகளும் மகந்துக்களும் பொது ஜனங்களின் தர்மப்பணத்தைஅள்ளி புளியங்கொட்டைபோல் இறைத்துக்கொண்டுதான் வருகிறார்கள். ஐகோர்ட்டிலும் இச்சட்டம் சட்டப்படி செல்லாதென்றும் இதைதள்ளிவிட வேண்டுமென்றும் வியாஜ்யம் தொடுத்திருக்கிறார்கள். இந்தசட்டத்தில் என்ன கெடுதல் இருக்கிறது என்பதையாவது இந்த சட்டத்தின் எந்த பிரிவின்படி இந்துமதத்திற்கோ தர்ம பரிபாலனத்திற்கோ என்ன ஆபத்திருக்கிறது என்பதையாவது இதுவரை எந்த பிராமணரும் எடுத்துச் சொன்னதேயில்லை.

மதம் போச்சு தர்மம் போச்சு இந்து மதத்தில் சர்க்கார் பிரவேசிக்கிறார்கள் என்று பொய்யழுகை அழுகிறது தவிர வேறொன்றும் சொல்வதே கிடையாது.

எந்த உலகத்தில் மதவிஷயங்களை அரசாங்கத்தார் திருத்த பிரவேசிக்காதிருக்கிறார்கள் 1817-லும் 1863லும் பிரவேசித்த காலத்தில் இந்த ஜாதியார் எங்கு போயிருந்தார்கள். அரசாங்கத்தார் தாமதமின்றி உடனே பிரவேசித்து தக்கது செய்யவேண்டும் என்று காங்கிரசிலும் கான்பரன்ஸிலும்ப தீர்மானித்த காலத்தில் இந்த ஜாதியார் எங்கு போனார்கள். சட்டம் செய்யும் அதிகாரம் நம்மகைக்கு வந்து விடும். நம்மிஷ்டம் போல் நம்ம ஜாதிக்கே எல்லா உரிமைகளும் இருக்கும் படியாக சட்டம் செய்து கொள்ளலாம் என்று நம்பியிருந்தார்கள்போலும் அல்லது பிராமணரல்லாதார் இவற்றை கவனியாமல் இன்னும் பிராமணர்களே ஏகபோகமாய் உண்ணும்படி விட்டுக்கொண்டிருப்பார்கள் என்று நினைத்தார்கள் போலும்.

எந்த காரியத்திற்கு நாம் அரசாங்கத்தாரிடம் போகாமல் இருக்கிறோம்? நம்முடைய சாமிக்கு வைக்கும் நாமம் வடகலையா தென்கலையா என்பதை சர்க்காரிடம் போய்தான் தீர்மானித்துக் கொள்ளுகிறோம். மடாதிபதியார் இவரா, அவரா என்று தீர்மானிக்க சர்க்காரிடம் தான் போகிறோம். நாம் கோவிலுக்குள் போகலாமா வேண்டாமா என்பதற்கு சர்க்காரிடம் தான் போகிறோம். என் ஜாதி பெரியதா உன் ஜாதி பெரியதா என்பதற்கு சர்க்காரிடம் தான் போகிறோம். ஏழ்மைப்பட்டதேசத்து பொது ஜனங்களின் பணம் வருஷம் ஒன்னரைக் கோடி ரூபாயுக்கு மேல் மதத்தின்பேரால் வசூலித்து அயோக்கியர்களுக்கும்பஞ்சமாபாதகத்துக்கும் உபயோகப்படுத்துவதைகவனிக்க ஒரு சட்டம் வந்தால் அது கூடாது என்று சொல்லுபவர்கள் யோக்கியர்களா? நமக்குள் நாமேபார்த்துக் கொள்ளக் கூடாதா என்றால் இதுவிஷயத்தில் நமக்குள் என்ன யோக்கியப்பொருப்பு இருக்கிறது." 10லக்ஷம் இருபது லக்ஷம் போட்டு நீ கோயில் கட்டிக்கொடுத்து சொத்தும் விடவேண்டும் நான் செங்கல்லை அடுப்பில் போட்டுசூடேற்றி ஈரத்துணிமேல்போட்டு ஆவியுண்டாக்கி சுடுசாதம் என்று வெரும் பாத்திரத்தை சாமிக்குவைத்து ஆராதனை செய்யவேண்டும் அது சாதத்தின் ஆவியா சுடுசெங்கல் ஆவியா என்பதைக்கூட நீ பார்க்கக்கூடாது பார்த்தால் பாவம்" என்று சொல்லுகிற ஜனங்களை வைத்துக்கொண்டு நமக்குள் எப்படி சரிசெய்து கொள்ளுகிறது வைக்கத்தில் தெருவில்நடக்கஎத்தனை பேர்ஜெயிலுக்குபோகவேண்டி வந்தது கல்பாத்தியில் தெருவில் நடக்க 144 யார் வேண்டுகோளின் பேரில் போடப்பட்டது அதற்காக சர்க்கார்இடம் யார்போனது நமக்குள் சரிப்படுத்திக்கொள்ளக்கூடாதா என்கிற யோக்கியர்கள் இந்த சமயம் ஏன் சர்க்காரிடம் போகவிட்டார்கள் பொது ஜனங்கள் பணத்தில் நடத்தப்படும் வேதபாடசாலைகளில் பிராமணன் தான் படிக்கலாம் சூத்திரர்கள் படிக்கக்கூடாதுஎன்று சொல்லுகிறபோது நமக்குள் சரிப்படுத்திக்கொள்ளக் கூடாதா என்கிற பிரபுக்கள் எங்கே போயிருந்தார்கள்.

இவற்றை பிராமணரல்லாதார் தயவு செய்து கருத்தாய் கவனிக்கவேண்டும் பிராமணரல்லாதாருக்குள் கொஞ்சம்பிளவு.

நவசக்தி

எழுதுவதாவது.

"சுயராஜ்யக்கட்சியாரின் சுத்த சுதேசிய வீரச்செய்கை."

ஸ்டேட்ஸ்மன் பத்திரிகைக்கு இந்தியர் ஒருவர் எழுதியிருக்கும் கடிதத்தில் பம்பாயில் ஸ்ரீமான். படேலும், கல்கத்தாவில் தேசபந்துவும் ரயில்வே ஸ்டேஷனுக்குச் சென்று இராஜப் பிரதிநிதியை வரவேற்க மறுத்துவிட்டார்களென்றும், இத்தகைய ஒத்துழையாமை மிகவும் சிறுமையுடையதென்றும் குறிப்பிட்டுவிட்டுப் பின் வருமாறு எழுதுகிறார்:—

"கல்கத்தா மேயரும் வங்காள சுயராஜ்யக்கட்சித் தலைவருமான ஸ்ரீமான். ஜே. எம். சென்குப்தா இத்தகைய சிறுமைக்குணம் உடையவரல்லரென்று அறிந்து மகிழ்ச்சியடைகிறேன். இந்திய அரசாங்கத்தின் சட்டசபை அங்கத்தினர் பதவிபெற்ற ஸ்ரீமான். எஸ். ஆர். தாஸைச் சிறப்பிக்கும் பொருட்டுச் சென்ற திங்கட்கிழமை கல்கத்தா கிளப்பில் ஜனாப். கஸ்னவி நடத்திய விருந்திற்கு அவர்வந்தது குறித்து உத்யோகஸ்தர்கள், உத்தியோகப் பற்றில்லாதவர்கள் அனைவரும் பெருமகிழ்ச்சி தெரிவித்தார்கள். இந்தியா அரசாங்கத்தின் உள்நாட்டு அங்கத்தினர். வங்காள அரசாங்கத்தின் காரியதரிசி பிரஸிடென்ஸி மாஜிஸ்ட்ரேட்டு, போலீஸ் கமிஷனர் இவர்களுடன் ஒரே மேஜையில் அமர்ந்து உணவுண்டு ஸ்ரீமான் சென்குப்தா ஓர் அரிய உதாரணத்தை ஏற்படுத்தி விட்டார். இத்தகைய சங்கத்தில் அமர்ந்திருக்கும்போது சிறுமையெல்லாம் தானே மறைந்து விடும்! மேலும், ஸ்ரீமான் சென்குப்தாதரித்து வந்த அழகிய ஆங்கில விருந்துடை அவருக்குக் கதர்ப்பைத்தியம் கிடையாதென்பதையும் நன்கு காட்டிற்று."

இச்செய்தியை முதலில் நாம் நம்பக்கூடவில்லை ஆனால் மற்ற கல்கத்தா பத்திரிகைகளிலிருந்தும் இஃது உண்மையென்றே தெரியவருகிறது இதுவரை இச்செய்திக்கு மறுப்பும் வெளியிடப்படவில்லை.

ஏற்பட்டவுடன் சட்ட சபையால் இந்து தேவஸ்தான சட்டத்தை மாற்ற பிராமணர்களால் தீர்மானம் கொண்டுவந்தாய் விட்டது.

இனிவரப்போகும் சட்டசபைக்கும் தேவஸ்தான சட்டத்தை மாற்ற சம்மதிக்கும் அங்கத்தினர்களுக்கு சாதகமாய் பிரசாரம் செய்யவும் அவர்கள் செலவுக்கு பணம்கொடுக்கவும்மகந்துக்களும் மடாதிபதிகளும் இப்போதிருந்தே ஏற்பாடு செய்து வருகிறார்கள். சுயராஜ்யக்கட்சி பிரசாரத்திற்கு இந்தப் பணம் தான் தாண்டவமாடும். சில பிராமணரல்லாதாரும் இப்பொழுதிருந்தே இதற்கு சம்மதம்கொடுத்து சிலமகந்துக்கள் தயவையும் மடாதிபதிகள் தயவையும் சம்பாதித்துக்கொண்டு வருகிறார்கள். பிராமணரல்லாத ஓட்டர்களே! ஜாக்கிறதை! ஜாக்கிறதை! கோட்டையை விட்டீர்களானால் பிறகு வெகுநாளைக்கு பிடிக்க முடியாது.

ஒத்துழையாமைக்கு விருத்தியுரை.

ஸ்ரீமான். சென்குப்தா அழகிய ஆங்கில உடைதரித்து வந்ததைப்பற்றி நாம் ஒன்றும் சொல்லப்போவதில்லை. அவருக்குக்கதர் பைத்தியம் இல்லையென்று அறிந்து தேசமக்கள் கவலை நீங்கப்பெறுவார்கள். அதிகாரவர்க்க பக்தர் ஒருவருக்கு அரசாங்கத்தில் உயர்ந்த பதவி கிடைத்ததின் பொருட்டு நடத்தப்பட்ட விருந்துக்கு ஸ்ரீமான். சென்குப்தா சென்றது முறையா என்பதைப்பற்றி மட்டும் சில வார்த்தைகள் கூறவிரும்புகிறோம். ஸ்ரீமான். தாம்பே உத்தியோகம் ஒப்புக்கொண்டதை துரோகம் என்று பலமாகக் கண்டித்த ஸ்ரீமான். சென்குப்தாமற்றோர் உத்தியோக விருந்துக்குச்சென்றது நமக்கு வியப்பையளிக்கச்செய்கிறது. இந்தியா கவர்ன்மெண்டின் புதிய சட்ட அங்கத்தினர் வீட்டில் ஒரு கலியாணம் நடந்து அவ்விருந்துக்குச் சுயராஜ்யக்கட்சித்தலைவர் போனால் நாம் ஆட்சேபியோம் ஆனால் இஃது அவ்வாறன்றே. ஸ்ரீமான். சென்குப்தாவின் செயல் முறையானால், இராஜப்பிரதிநிதியும் கவர்னர் துரைகளும் அளிக்கும் விருந்துகளுக்குப்போவதில் தவறு என்ன? சட்டசபைக்குச்செல்வது ஒத்துழைப்பல்லவென்றும், இன்னும் தாங்கள் ஒத்துழையாதாரே யென்றும் சுயராஜ்யக்கட்சியினர் சொல்லுகின்றனர். ஆனால் அவர்கள் அனுசரிக்கும் ஒத்துழையாமைக்குப்பொருள் நமக்கு விளங்கவேயில்லை. அவர்களுடைய ஒத்துழையாமைக்கு அடியிற்கண்ட முறையைப் பற்றி விருத்தியுரையொன்று அமைக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். ஒத்துழையாமையென்பது அரசாங்கத்துடன் ஒத்துழைக்க மறுத்தலாம். உதாரணங்கள்.

(1) வது இராஜப்பிரதிநிதியைக்காண ரயில்வேஸ்டேஷனுக்குச் செல்வது "ஒத்துழைப்பு."

(2) வது அவருடைய நிருவாக சபை அங்கத்தினரின் விருந்துக்குச்செல்வது "ஒத்துழையாமை"

(3) வது மாகாண அரசாங்கநிருவாகப்பதவியை ஏற்றுக்கொள்வது "ஒத்துழைப்பு"

(4) வது இந்தியா சட்டசபை அக்கிராசன பதவியை ஏற்று இராஜப்பிரதிநிதியைத் தினம் பத்து முறை பேட்டி கண்டு சீர்திருத்தச்சட்ட சபை நன்கு நடைபெறும்படி செய்வது "ஒத்துழையாமை"

(5) வது மட்டிமான் கமிட்டியில் பதவி ஏற்றுக்கொள்வது "ஒத்துழைப்பு"

(6) வது ஸ்கீன் கமிட்டியில் அங்கத்தினர் பதவி ஏற்பது "ஒத்துழையாமை"

"ஒத்துழையாமை" என்னும் பதத்திற்கு இது நல்ல விருத்தியுரை.

கும்பகோணம் ஜில்லா காங்கிரஸ் கமிட்டியின் தீர்மானங்கள்

கும்பகோணம் ஜில்லா காங்கிரஸ் கமிட்டி நிர்வாக கூட்டம் காங்கிரஸ் ஆபீஸில் 17-11-25-ல் C. S. சாமிநாத செட்டியார் அவர்கள் தலைமையில் கூடி அடியிற்கண்ட தீர்மானங்களை, ஏகமனதாய் நிறைவேற்றப் பட்டது.

தீர்மானங்கள்.

(1) பாட்னாவில் கூடிய அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி கூட்டத்தில் காங்கிரஸ் அங்கத்தினர்கள் காங்கிரஸ் சபைகளில் வாக்குக்கொடுக்கும் போதும் காங்கிரஸ் நிர்வாக வேலைகளை செய்யும்போது மட்டும் கதர் கட்டினால் போதுமென்று செய்திருக்கும் தீர்மானமானது சுயராஜ்யம் அடைவதற்கும் நம்நாட்டுப்பொருளாதார அபிவிர்த்திக்கும் தடையாக இருப்பதால் ஷை தீர்மானத்தைக்கண்டிப்பதோடு காங்கிரஸ் அபிமானிகள் இவ்விஷயத்தில் பொது ஜனங்களுக்கு வழிகாட்டிகளாக இருந்து எப்போதும் கதரே உடுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறது.

(2) நிர்மாண திட்டத்திற்கு முக்கிய அம்ஸமான தீண்டாமையொழித்தலுக்கு நமது நாட்டில் பிறப்பினால் ஏற்றத்தாழ்ச்சி உண்டென்னும் நம்பிக்கையை பொது ஜனங்களிடையே பரவவிடாமல் தடுக்கவேண்டியது மிக அவசியமானதால் பிரசாரமூலியமாகவும் சகோதர பான்மையை வளர்க்கும் பொது ஸ்தாபனங்கள் மூலமாகவும் பிறவி வித்தியாசங்களை ஒழிக்கவேண்டுமென்று நிர்மானிக்கிறது.

(3) இந்து சமூகங்களுக்குள் பரஸ்பர நம்பிக்கையும் ஒற்றுமையும் ஏற்படவேண்டுமானால் சட்டசபைகள் ஸ்தலஸ்தாபனங்கள் முதலியவற்றில் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் அவசியமானதென்றும் அதிலும்பிராமணர்தீண்டாதார்எனப்படுவோர் தாங்களே தங்கள் சமூகத்திலிருந்து பிரதிநிதிகள் தெரிந்தெடுத்துக்கொள்ள உரிமையேற்பட வேண்டுமென்று அபிப்பிராயப் படுகிறது.

(4) கும்பகோணம் ஜில்லா வென்றிருப்பதை வட தஞ்சையென்று ஏற்கனவே இருந்தபடி, மாற்றவேண்டுமென்று நிர்மானிக்கிறது.

(5) காங்கிரஸ் நிர்மாண திட்டங்களை நிறைவேற்றுவதற்காக வசூலிக்கப்பட்ட காங்கிரஸ் நிதியை ஷை திட்டங்களை நிறைவேற்றுவதற்காகவே செலவிடப்பட வேண்டுமே யொழிய சுயராஜ்யக் கட்சியின் பிராசாரத்திற்கும் சட்ட சபைகள் தேர்தலுக்கும் செலவிடக்கூடாதென்று தீர்மானிக்கிறது.

(6) மேற்கண்ட நிர்மானங்களை காஞ்சீபுரம் மகா நாட்டுத்தலைவரையும் தமிழ் மாகாண கமிட்டித் தலைவரையும் காஞ்சீபுரம் கான்பரன்ஸ் ஆலோசனைக்கு கொண்டுவரும்படி நிர்மானிக்கிறது. என்று கும்பகோணம் ஜில்லா காங்கிரஸ் காரியதரிசி V. சுப்பிரமணியன் எழுதுகிறார்.

பொருமை.

இது, மிகப் பெரியது; மனிதர்களை இது மாடாகக்கூட ஆக்கிவிடுகிறது; மனித அறிவைக் கொன்றுவிடுகிறது; ஒன்றும் புரியாமற் செய்துவிடுகின்றது. இது செய்யும் கொடுமைகள் எண்ணித் தொலையா. எழுத்தில் அடங்கா. இது கொண்டவர் வாய், வாய்மையை மறந்து விடுகிறது. வாய்மையில்லா வாய் கால்வாய்தான். பொருமை கொண்டவர்கட்கு இன்னது தான் பேசுகின்றோமென்பதுகூடப் புரியவில்லை. வாயில் வந்ததெல்லாம் உளறிக் கொட்டிவிடுகிறார். குடி வெறியனுக்கும் பொருமை கொண்டவனுக்கும் வித்தியாசம் சிறிதுமில்லை. இது சும்மா சொல்வதல்ல. இருவர் பேச்சையும் பார்த்தால் தெரியும். பொருமை எல்லாத் தீமைகளையும் நல்கும். மக்கள் புன்பிறப்படைந்து பேதுற வேண்டுமானால் பொருமைகொள்ளலாம். மக்களாகப் பிறந்த பயனை அடையவெண்ணும் யாரும் பொருமை கொள்ளலாகாது. உயர்ந்த எண்ணங்கள் தங்கவேண்டிய மனத்துள் பொருமையைக் குடிவைத்து விட்டால் அது நல்லவற்றையெல்லாம் உள்ளே வரவொட்டாமல் தடுத்துவிடும். நல்லனவனுகப்பெறு உளம் நன்மை யடைவது எப்படி? ஒருவனுக்கு வேறு பல நற்குணங்கள் இருந்த போதினும் பொருமை என்ற ஒன்று அவனை அணுகுமானால் எல்லாவற்றையும் தேய்த்துத் தானே ஆட்சி செலுத்தும். இதை அநேகர் இடத்தில் அநுபவத்தில் காண்கிறோம். அம்மம்ம! பொருமை மிகவும் பொல்லாதது. ஒருவனிடம் ஒருவன் பொருமை கொண்டுவிட்டால் அவன் செய்யும் நல்லவற்றையெல்லாம் கூடத் தவறென்று கூறப் பின்வாங்குகின்றானில்லை. தனக்கு நல்லதெனப் பட்டாலும் அதனைச் செய்பவரைக் கொண்ட பொருமை காரணமாக அதனை அவன் மறுக்கின்றான். இப்படியும் இன்னும் எத்தனையோ பலவற்றையும் பொருமை செய்கிறது. ஆகலால் மக்களாகப் பிறந்த பயனையடைந்து உய்யவெண்ணும் மக்கள் பொருமை விடுத்து உயர்வார்களாக. எனச் சோமசுந்தரனார் சொல்லுகிறார்

ஊழியன்.

ஈரோடு மகாஜனங்களுக்கு ஓர் விஞ்ஞாபனம்.

தற்சமயம் ஈரோட்டில் காலரா என்னும் கொடிய தொத்து வியாதி ஏற்பட்டு இது வரையில் சுமார் 8 பேர் இறந்து விட்டார்கள். இன்னும் சிலருக்குக் கண்டிருப்பதாகவும் வதந்தி, காவேரி ஆற்றின் பிரவாவாகத்தினால் தண்ணீர் அதிகமாகக் கலங்கி வருகிறது. ஷெ ஜலத்தைப்படிக்காரம் போட்டுச் சரியாக வடிகட்டியும், குளோரினேஷன் (**Chlorination**) செய்து காலராக் கிருமிகளைப் போக்கியும் காலராவைத்தடுப்பது முதற்கடமை என்பது சாதாரண ஜன

3-ம் பத்தி பார்க்க.



தொழிலாளவீரர்.

ஸ்ரீமான். கோ. ம. நடேச நாயக்கர்.

ஸ்ரீமான். நடேச நாயக்கர் அவர்களைப் பற்றி தமிழ் நாட்டவர்க்கும், தமிழ்ப் பத்திரிக்கைகளைப் படிக்கும் வெளிநாடுகளிலுள்ள தமிழர்களுக்கும் நாம் அறிமுகம் செய்துவைக்க வேண்டியதில்லை. ஸ்ரீமான். நடேச நாயக்கர் தமது வாலிப காலத்திருந்தே பொது நோக்குடையார். தொழிலாள மக்களுக்காக சென்னையில் பெரிதும் உழைத்தவர். தேச ஊழியர்கள் வேண்டுமென காந்தியடிகள் கூவிய காலத்தில் காங்கிரஸில் சேர்ந்து நல்ல ஊழியம் செய்ததின் பயனாய் ஓர் வருட சிறைவாழ்க்கையும் பெற்றவர். இத்தகைய சிரியர் தற்போது பினாங், சிங்கப்பூர், கோலாலம்பூர் முதலிய மலேயா நாட்டுக்கு விஜயம் செய்திருக்கிறார். ஸ்ரீமான். நடேச நாயக்கர் தமது பிரயாண காலத்தில் மேற்கண்ட இடங்களில் நமது "குடி அரசு" பத்திரிக்கைக்குப் பிரதிநிதியாக இருந்து சந்தாதாரர்களைச் சேர்க்க இசைந்துள்ளார். அது பற்றி அவருக்கு எமது நன்றியறிதலை செலுத்துகிறோம் வெளிநாடுகளிலுள்ள தமிழர்கள் நமது "குடி அரசு"க்கு ஸ்ரீமான். நடேச நாயக்கர் மூலமாய் வேண்டிய துணை செய்ய வேண்டுமாய் மிகுதியும் வேண்டுகிறோம்.

2-ம் பத்தியின் தொடர்ச்சி.

ங்களுக்கே தெரிந்த விஷயம். இதற்கு முன்னிருந்த சேர்மேன்கள் இந்த சந்தர்ப்பங்களில் மேலே சொன்னபடி தகுந்த ஏற்பாடுகளைக் கையாடி வந்ததால் ஷெ தொத்து வியாதி நம் ஊரை அணுகாமலிருந்தது, (**While Rome was burning, Nero was fiddling**) ரோமாபுரியானது எரிந்து கொண்டிருந்த காலையில் அதன் சக்கரவர்த்தியான நீரோ என்பவர் பிடில் வாசித்துக் கொண்டிருந்தாராம்! அது போல் நமது தற்கால சேர்மேன் அவர்கள் ஊரில் காலராத்தீயும் மலேரியாநெருப்பும், பரவிக்கொண்டிருக்க உல்லாசமாக பேச்சிப்பாறையின் மீது உட்கார்ந்து கொண்டு 24 மணி நேரமும் சிங்காரவனை கீதம் பாடிக்கொண்டிருக்கிறார். பத்தாக்குறைக்கு சேர்மேனின் மோட்டார் சைக்கிள், ஏழைகளின் பணத்தில் மாதா மாதம் 40 ரூபாய் சாப்பிட்டு ஏப்பம் விடுகிறதே ஒழிய தெருக்களிலுள்ள அசுத்தங்களையும் ஊரிலுள்ள தொத்து வியாதிகளையும் கவனிக்க நாளது வரைஉபயோகப்பட வில்லை. மகாஜனங்களே, உங்களுக்கு ஏற்பட்டிருக்கும் கஷ்டங்களை சேர்மேன் நிவர்த்திப்பார் என்பது பகற்கனவே ஆகையால் உங்களுடைய உயிரைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டுமானால் காலரா ஒழியுமட்டும் தண்ணீரைக் கொதிக்கவைத்து வடிகட்டிக்குடியுங்கள். வீடுகளையும் சுற்றுப்பக்கங்களையும் எப்பொழுதும் சுத்தமாக வையுங்கள். நிலக்கடலை போன்ற அஜீரணத்தைக்கொடுக்கக்கூடிய பதார்த்தங்களைப்புசியாதேயுங்கள். சேர்மேன் உங்கள் கஷ்டத்தை நிவர்த்திப்பாரென்று நம்பி ஏமாந்து போகாதிர்கள்.

பொது ஜனப்பிரியன்.

விசேஷ அறிவிப்பு.

சென்ற வாரம் முதல் நமது பத்திரிக்கையை தென் இந்தியா ரயில்வே ஸ்டேஷன்களிலுள்ள மெஸர்ஸ். ஹிக்கின் பாதம்ஸ் கம்பெனியார்களின் புத்தக சாலைகளில், விற்பனை செய்ய ஏற்பாடு செய்திருக்கிறோம். தேவையுள்ளவர்கள் வாங்கிக் கொள்ளலாம்.

மானேஜர்.

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

வகுப்புவாரிப்பிரதிநிதித்துவம்.

இதைப்பற்றி கொஞ்சகாலத்துக்கு முன்பு நமது 16-8-25 குடிஅர்சின் இதழில் சித்திரபுத்திரன் யெழுதிய ஒரு கட்டுரை வாசகர்கள் பார்த்திருக்கலாம், இன்று நடக்கப்போகும் காஞ்சிமாகாநாட்டில் ஒரு தீர்மானம் வருவதாய்த்தெரிகிற படியால் அதனவசியத்தைப்பற்றி வாசகர்கள் மறுபடியும் அதைப்பற்றி அறியுமாறு சில வாக்கியங்கள் எழுதுகிறோம். வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் என்பது ஒருதேசத்தின் ஆட்சியின்பொது உரிமையும் அந்நாட்டின் குடிமக்களின் உரிமை சகலமும் எல்லாவகுப்பாரும் ஏற்றத்தாழ்வின்றி சமமாய் அடையவேண்டிய தென்பது தான். இதை அரசாங்கத்தாரும் குடிமக்களுக்கு சரியாய்வழங்குவதாய் 1840-ம் வருஷத்திலேயே ஒப்புக்கொண்டு (ஸ்டாண்டிங் ஆர்டர் 125 ன் மூலமாய் வெளியிட்டுமிருக்கிறார்கள். ஆதலால் இந்தியர்களுக்கு பெரியஉத்தியோகங்கள் ஏற்பட்டதன்பிறகோ சீர்திருத்தங்கள் ஏற்பட்டதன்பிறகோ வகுப்புவாரி பிரதிநிதித்துவம் என்ற பேச்சு பிறந்ததல்ல. ஆனால் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் ஏற்பட்டால் யாருடைய செல்வாக்கும்போகங்களும் ஆதிக்கங்களும் குறைந்துவிடுமோ அவர்கள் வசமே அரசாங்கத்தின் ஆதிக்கமிருந்து அவர்களே அநுபவித்துக் கொண்டேவந்ததினால் வகுப்பு வாரி பிரதிநிதித்துவ மென்பது சர்க்கார் உத்தரவளவிலும் காயிதவளவிலும் நின்று போய்விட்டது. அதன் பலனாய் பிரிவுகளும், வேற்றுமைகளும் துவேஷங்களும் தந்திரங்களும் பகைமைகளும் வளர்ந்துகொண்டே வந்து இப்பொழுது அதுகள் பலனளிக்க ஆரம்பத்திருக்கிறது. ஆரம்பித்திருக்கும் முறையைப்பார்த்தால் இதனுடையமுடிவுஎன்னவாகுமோ என்று எண்ணுகிறபோது பயமாகவே இருக்கிறது. இந்தியா ஒழிந்த மற்றநாடுகளுக்கு வகுப்புவாரிபிரதிநிதித்துவம் அதிக அவசியம் இல்லாத போதிலும் சிற்சில விடங்களில் தொகுதிகள் பேராலும் வகுப்புகளின் பேராலும் இருந்துகொண்டுதான் வருகிறது. குடியேற்ற நாடுகளிலும் இவ்வழக்கமிருந்து கொண்டுதான் வருகிறது. நமது நாட்டில் சிலர் வகுப்புவாரிபிரதிநிதித்துவம்வந்தால்ஜனங்களை பிரித்துவிடும் என்று சொல்லுகிறார்கள். நமது நாட்டில் மகமதியர்களுக்கும். கிருஸ்துவர்களுக்கும், வகுப்புவாரி பிரதிநிதித்துவம் ஏற்பட்டதின்பிறகு என்ன பிரிவினை புதிதாய் ஏற்பட்டுப்போய் விட்டது? பிரிட்டிஷ் அரசாங்கம் ஏற்பட்டு 150 வருஷத்துக்குமேலாகியும் இன்னமும் தீண்டாதாராகிய ஏழுகோடி மக்களுக்கு ராஜீய வாழ்வில் சுதந்தரம் பெற யோக்கியதையில்லையென்று தானே சொல்லவேண்டியிருக்கிறது. அதன் பலனைப் அவர்களத்தனைபேரும் அரசாங்கத்தை தானே நத்திக்கொண்டிருக்க வேண்டியதாய்ப் போய்விட்டது பிராமணரல்லாதாரென்றும் 24 கோடி இந்துக்கள் ராஜீய வாழ்வில் சம உரிமை பெறுவதற்கில்லாமல் பிற்போக்கான வகுப்பில் சேர்க்கப்பட்டு அரசாங்கத்தாரையும், பிராமணர்களையும், நத்திக்கொண்டுதானே இருக்கவேண்டியதாய்ப் போய்விட்டது இதற்கு காரணமென்ன? பிறவியிலேயே அவர்களுக்குஇவ்வுரிமையை பெறயோக்கிதைஇல்லாததா? அல்லது அவர்கள் இவ்வுரிமைபெற வொட்டாமல் உயர்பதவியிலிருக்கிறவர்கள் தங்கள் செல்வாக்கால் கொடுமைப்படுத்தி முன்னேற வொட்டாமல் அடக்கி வைத்திருப்பதா? குறைந்தது 50 வருஷத்திற்கு முன்பாவது பிராமணரல்லாதாருக்கும், தீண்டாதாரென் போருக்கும், வகுப்புவாரிப்பிரதிநிதித்துவம் கிடைத்திருந்தால் இன்றைய தினம் இவர்களிருவரின் நிலைமையும் இப்படி யிருக்குமா? ஸ்ரீமான்களான B. N. சர்மாவுக்கும் C. P. ராமசாமிஅய்யருக்கும் கொடுத்திருக்கும் உத்தியோகங்களை ஸ்ரீமான்களான M. C. ராஜாவுக்கும். R. வீரய்யனுக்கும் கொடுத்தால் பார்க்கமாட்டார்களா? C. P. ராமசாமி அய்யர் அவர்கள் இருக்கும் உத்தியோகத்தில் ஸ்ரீமான் வீரய்யன் அவர்கள் இருந்தால் பாலக்காடு தெருவில் நடக்க 144 ஏற்பட்டிருக்குமா? கோவிலுக்கு போனதற்காக தண்டனை அடைந்திருக்க முடியுமா? என்னகாரணத்தால் இவர்களுக்கு அந்த உத்தியோகம் கிடைக்காமல்போய்விட்டது? யோக்கிதை இல்லாததாலா வகுப்புவாரி பிரதிநிதித்துவம் இல்லாததாலா? ஜனாப் சர் முகம்மது ஆபீபுல்லா சாயபுக்கும் டாக்டர் முகம்மது உஸ்மான் சாயபுக்கும். 5000, ம் 6000, ம் சம்பளம் கிடைக்கக்கூடிய பதவிகள் எப்படி கிடைத்தது, இப்பொழுது தான் அந்தஸ்தானத்திற்கு அவர்கள் யோக்கிதை உடையவர்களாய் விட்டார்கள் என்கிற காரணத்தாலா? வகுப்புவாரி பிரதிநிதித்துவ கொள்கையின் வாசனையினலா? இவற்றை பொது மக்கள் சிந்தித்துப்பார்த்தால் தாழ்த்தப்பட்டவர்களுக்கும் பிற்பட்ட வகுப்பார்கள் என்றுகருதப்பட்ட வர்களுக்கும் வகுப்புவாரிபிரதி நிதித்துவம் இல்லாமல் எப்படி சமத்துவம் ஏற்படும் என்பதை அறிவார்கள். இப்போது பிற்பட்ட வகுப்பார் என்று அழைக்கிற வகுப்பாரெல்லாம் பிரிட்டிஷார் நம் நாட்டுக்கு வரும்போது பிற்பட்ட வகுப்பாராகவா இருந்தார்கள். பல பிராமணர்கள் அரசாங்கத்திற்கு அனுகூலமாயிருந்ததாலும்மற்றவர்கள் அப்படியில்லாததாலும் அரசாங்கத்தார்பிராமணர்களுக்கே சகலசவுகரியமும், உரிமையும் கொடுத்ததனல் பிராமணர்கள் முற்பட்ட வகுப்பாராகவும் பிராமணரல்லாதவர்கள் பிற்பட்டவகுப்பார்களாகவும் ஏற்பட்டுப்போய் விட்டது. இந்த பிற்பட்ட வகுப்பார் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் இல்லாமல் வேறு எந்த வழியில் முற்பட்டவர்கள் ஆகக்கூடும். இப்போது அவர்களுக்கு புத்தியில்லையா? சக்தியில்லையா? கல்வியில்லையா? ஏன் தங்கள் தொகைக்குத்தகுந்த உரிமை அடையாதிருக்கிறார்கள் இந்தியர்கள் அநேக ஜாதியார்கள் நாள் போகப்போக உரிமை வளர்ந்துகொண்டே போகும் பிறகு எத்தனைபேருக்கு கொடுப்பது என்று சிலர் பேசுவார்கள் ஆனால் தற்காலம் அரசாங்கத்தில், தென்னாட்டில் ஐரோப்பியர் ஆங்கிலோஇந்தியர், கிருஸ்தவர், மகமதியர், பிராமணர்கள், பிராம்மணரல்லர்தவர்கள், தீண்டர்தார்கள், என இவ்வெட்டு வகையாய்த்தான் பிரிக்கப்பட்டிருக்கிறது. இவற்றில் ஐரோப்பியர் ஆங்கிலேயஇந்தியர், கிருஸ்தவர், மகமதியர். இவர்களுக்கு பிரித்து கொடுத்தாய்விட்டது இவர் நீங்கிய மற்றவர்களான பிராமணர் பிராமணரல்லாதார் தீண்டாதார் என மூன்று வகுப்பாரையும் மகமதியரல்லாதார் என்னும் பெயரால் அழைக்கப்பட்டு அவர்களுக்கு மாத்திரம் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் வழங்கப்படாமலிருக்கிறது இம் மூன்று வகுப்பாருக்கும் வகுப்புவாரிபிரதிநிதித்துவம் ஏற்பட்ட பிறகு மறுபடியும் உள்வகுப்புகள் ஏற்படுமே என்கிற பயமிருக்குமானல், அதற்கும் நாம் தயாராயிருக்க வேண்டியது தான் உத்தியோகங்களுக்கு பெருத்த சம்பளங்கள் கொடுப்பதை நிறுத்திக்கொண்டோமேயானல்எத்தனைவகுப்புகளுக்கு வேண்டுமானலும் பிரதிநிதித்துவம் கொடுப்பதில் நமக்கு கஷ்டம் ஏற்படாது மேல்நாடுகளில் பார்லிமெண்டுமுதலிய சபைகளுக்கு 500, 1000 என்கிற கணக்குள்ள மெம்பர்கள் இருந்து காரியம் நடத்தவில்லையா அதுசெய்வது நமக்குகஷ்டமே இருக்காது சண்டைவருவதெல்லாம் பெரும் சம்பளத்தை உத்தேசித்துத்தானே. சம்பளமில்லாத அதிகாரத்தை அனேகமாய் யெல்லாரும் விரும்பமாட்டார்கள் ஒரு வருக்கொருவர்சண்டைபோட்டு கொள்ளமாட்டார்கள் ஒருவரைக்கெடுக்க ஒருவர் தந்திரங்கள் செய்யமாட்டார்கள் தேசம்நம்முடையது என்கிற எண்ணமும் தேசத்தின் பொது நலத்திற்கு யெல்லோரும் ஒன்றுசேர்ந்து உழைக்கவேண்டும் என்கிற எண்ணமும் தானகவே ஏற்படும் இப்போது ஜனங்களுக்குள் இருக்கும் வேற்றுமைகள் ஒழியும் சர்க்காராரும் ஒருவரைவிட்டு ஒருவரை கொடுமைப்படுத்தச் சொல்லமுடியாது ஆதலால் தேச நலத்திலும் சமூக நலத்திலும் அக்கரையுள்ளவர்கள் காஞ்சீபுரம்மகா நாட்டில் வகுப்புவாரி தீர்மானத்தை கொண்டுவந்து நிறைவேற்ற வேண்டுகிறோம்.

வந்தேமாதரம்.

கரூர் சுயம் கத்தர் ஜவுளிகள்.

தமிழ் நாட்டு கத்தர் போர்டாரால் நற்சாக்ஷி பத்திரம் பெற்ற கீழ்கண்ட கத்தர் ஸ்டோரில் உடை நாணயத்திலும் நெசவு அழுத்தத்திலும் நீடித்து உழைக்கக்கூடியதுமான பலரகம் வேஷ்டிகள், துண்டுகள், அங்கவஸ்திரம், வெள்ளைபீஸ்கள், வடர்டிங், கோட்டிங், சால்வைதினுசுகள் கத்தர் போர்டின் விலைக்கே விற்கப்படும். தேவைக்கு அட்வான்சுடன் ஆர்டர் செய்யுங்கள்

S. ராமசாமி அய்யர்,

ராமவிலாஸ் கத்தர் ஸ்டோர்ஸ் கரூர்.

அத்தாட்சிப்பத்திரம்

(தமிழ்நாட்டுக் காங்கிரஸ் கமிட்டி) ஸ்ரீமான் எஸ். ராமசாமி அய்யர் ராமவிலாஸ் கத்தர் ஸ்டோர் கை நூலால் கைத்தறியால் தயார்செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்தி செய்து நியாயமான விலைக்கு விற்றுக்கொண்டிருக்கிறார்.

(ஒப்பம்) வா. மு. தங்கப்பெருமாள்,
காரியதரிசி கத்தர், இலாகா

உண்மையான கதர். கெட்டியான கதர்.

கதர் வாங்குகிறவர்கள் விலையை கவனிப்பதுடன் சரக்கு அழுத்தத்தையும், நயத்தையும், கெட்டியையும் கவனிக்கவேண்டியது முக்கியமான கடமை. தமிழ்நாடு காங்கிரஸ் கதர் போர்டாரின் உதவியாலும், மேற்பார்வையாலும், அத்தாட்சிப் பத்திரத்துடனும் நடை பெறுகின்றது. கதர் போர்டாரின் விலைக்கே விற்கப்படும்.

காங்கிரஸ் அத்தாட்சிப் பத்திரம்

ஸ்ரீ காந்தி கதராலயத்தார் கைநூலால் கைத்தறியால் தயார் செய்யப்பட்ட உண்மையான கதர் உற்பத்திசெய்து நியாயமான விலைக்கு விற்கிறார்கள்.

வா. மு. தங்கப்பெருமாள்,
காங்கிரஸ்கதர் போர்டு காரியதரிசி.

ந. ராமசாமி

மானேஜர், ஸ்ரீ காந்தி கதராலயம்,
திருப்பூர்

ஓர் மஹானின் மகிமை.

“அருமையான மூலிகையும் ரகசியமும்.”

குஷ்டம், க்ஷயம், முதல் சகலவித வியாதிகளும், செய்வினைகளும் நீங்கியும், புத்திர பாக்கியம் உண்டாகியும் அபாரமான எக்காரியங்களும் கோரியபடி முடிந்தும், ஏராளமான நற்சாக்ஷிகளும் சங்கத்தில் தங்கமெடலும் பெற்றவை.

எதற்காக தேவையானாலும் பதிலுக்கு ஸ்டாம்பு வைத்து கோயமுத்தூர் ஜில்லா கோட்டுப்பாளையம் பாலச்சந்திரன் ஆபீஸ் தலைவர், ஸ்ரீமான். எஸ். ஏ. கே. பிள்ளையவர்களுக்கு விபரமாக எழுதிக் கொள்வீர்களானால் சகலவிபரமும் புக்கும் கிடைக்கும்.

இலங்கை நாட்டுக்கு நமது ஏஜண்டு.

இலங்கை நாட்டுக்கு நமது “குடி அரசு”ப் பத்திரிகையின் ஏஜண்டாக இருக்க கொழும்பு செட்டித்தெரு, 45-ம் நெம்பர் கட்டடத்திலுள்ள சுத்தக் கத்தர் ஜவுளி நிலையம், ஸ்ரீமான். பெ.பெரி. சுப்பிரமணியஞ் செட்டியாரவர்களைக் கேட்டுக்கொண்டதின் பேரில் அவரும் சம்மதித்ததால் அவரை நியமித்திருக்கிறோம். நமது பத்திரிகைக்குச் சந்தாதாரராகச் சேர விரும்புகிறவர்கள் ஷையாரிடம் சந்தா செலுத்தி ரசீது பெற்றுக் கொள்ளலாம்.

மானேஜர்.

இனாம்! இனாம்!!

நூறு வருஷத்திய காலண்டரும், புஸ்தக சமாச்சாரங்களடங்கிய பத்திரிகையும் தபால் செலவின்றி அனுப்புவோம்.

ஸ்ரீ சாது ரத்ந சற்குரு புத்தகசாலை,
பார்க் டவுன் (P. O) சென்னை.

“தேசோபகாரி”

பர்மாவில் விடுதலை முழக்கஞ் செய்துவரும் ஓர் தமிழ் வாரப்பதிப்பு.

வருஷ சந்தா ரூபாய் ஐந்து.

மானேஜர்,
“தேசோபகாரி” லிமிடெட்,
45-36வது வீதி. ரங்கூன்.

“தேசபக்தன்”

ஓர் தேசீயத்தமிழ் பத்திரிகை.

பிரதி திங்கள், புதன், வெள்ளிதோறும் வெளிவருவது. விளம்பரத்திற் கேற்றது.

வருடசந்தா ரூபாய் 13.
வெளிநாடுகளுக்கு ரூபாய் 16.

காரியஸ்தர்,
“தேசபக்தன்” கொழும்பு.

“தெய்வீகன்.”

பார்க்கவகுல முன்னேற்றத்தை நாடி யுழைக்கும் ஓர் மாத சஞ்சிகை.

பார்க்கவர்கட்கு வருட சந்தா ரூ. **2-0-0**
ஏனையோர்கட்கு வருட சந்தா ரூ. **1-8-0**

காரியஸ்தர். “தெய்வீகன்”
பொன்மலை, திருச்சி.

நவ இந்தியா.

ஓர் வாரப்பத்திரிகை. ஆசிரியர். ஸ்ரீமான். டி. என். தியாகராஜ ஞானியார்.

வருட சந்தா ரூ. **5.**

மானேஜர், நவ இந்தியா.
திருவாரூர், S. I Ry.

வெள்ளியை கொடுத்து தங்கத்தைப் பெறுங்கள்.

வந்தாலும் போனாலும் சரி என்ற லாட்டரி இல்லை.

கைமேல் பலன் கிடைக்கும்

இது ஹம்பக்கில்லை.

பட்ட பகல் போல் வெட்ட வெளிச்சமானது

ஒரு ரூபாய் வெள்ளி நாணயமாகக் கொடுத்தால் 32

ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்.

பெறலாம்.

அதனை உபயோகித்தவர்கள் அது “தங்கத்திற்குச் சமமான நிறையுள்ளதென்று” கூறியிருக்கின்றனர். மனத்திலும், தேகத்திலுமுள்ள கோளாறுகளைப் போக்கடித்துப் பலஹீனம் அஜீரணம் முதலிய வியாதிகளை காஸ்தமாக கண்டிக்கின்றது.

விபரம் வேண்டுவோர் இன்றே கிரையாப்தாவுக்கு எழுதுங்கள்

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே மதராஸ்.

பெங்கால் இன்சூரன்ஸ் அண்ட் ரீயல் பிராப்பர்ட்டி கம்பெனி லிமிடெட்.

6. ஹேர்ஸ்ட்ரீட்,
கல்கத்தா.

காலஞ்சென்ற ஈரோடு M. அலாவுதீன் சாய்பு சம்சாரம் ஸ்ரீமதி ஐஷாபீபீ அம்மாள் எழுதுகிறார்.

என் கணவன் மேற்படி இன்சூரன்ஸ் கம்பெனியில் தன் ஆயுளை இன்சூர் செய்து இரண்டு அரை வருஷ கட்டணம் மாத்திரம் செலுத்தி விட்டு இறந்து போய் விட்டார். இறந்து போனவுடன் ஷை கம்பெனியாருக்கு பாலிசிபத்திரத்தோடு வேண்டிய ஆதாரங்களை எழுதியனுப்பிய உடன் யாதொரு தாமதமின்றியில் அவர் இன்சூர் செய்திருந்த முழுத்தொகையான ரூ. 2,000 மும், ஷை கம்பெனியின் இவ்வூர் ஏஜண்ட். ஸ்ரீமான் K. N. கிருஷ்ணசாமி செட்டியார் மூலமாக ஷை கம்பெனியின் பிரதிநிதியாகிய ஸ்ரீமான். U. N. வாசு அவர்களால் பெற்றுக் கொண்டேன் ஆதலால் ஒவ்வொருவரும் மேற்படி கம்பெனியிலேயே இன்சூர் செய்து கொள்வது அனுகூலம் தரக்கூடியது என்று மனப்பூர்வமாய் சிபார்சு செய்கிறேன்.

லோகல் ஏஜண்ட்,

K. N. கிருஷ்ணசாமி செட்டியார்
ஈரோடு.

ஈரோடு டைமண்ட் பிரஸில் அச்சிடப்பெற்று ஈ. வெ. ராமசாமி நாயக்கரால் வெளியிடப்பட்டது.